நாவாந்துறைப் படிப்பகம்

Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 16 வியாழக்கிழமை (29-03-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:123


# புது வருடப்பிறப்பை ஒட்டி இருதரப்பு யுத்தநிறுத்தம்!

## தொடர்ந்து நீடிக்கப்படவும் வாய்ப்பு

### மே மாதத்தில் பேச்சு ஆரம்பிக்கும் சாத்தியம்

கொழும்பு,மார்ச்29

**தமிழ் - சிங்களப் புதுவருடப் பிறப்பை ஒட்டி எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் அரசுத் தரப்பும் யுத்தநிறுத்தம் ஒன்றை அறிவிக்கும் வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

**இந்த யுத்தநிறுத்தம் தொடர்ந்து நீடிக்கப்படவும், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் மே மாதத்தில் ஆரம்பமாவதற்கும் அதிக சாத்தியங்கள் இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.**

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் தற்போது நடைமுறையில் உள்ளது.

தமிழ் - சிங்களப் புதுவருடத்தை ஒட்டி 13,14ஆம் திகதிகளில் அரசுத் தரப்பும் யுத்தநிறுத்தம் ஒன்றை அறிவிக்குமானால், அக்காலத்தில் இருதரப்பு யுத்தநிறுத்தமாக அது கடைப்பிடிக்கப்பட வாய்ப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த யுத்தநிறுத்தத்தை அரசுத் தரப்பு தொடர்ந்து நீடிக்கவும் சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மிகக் குறுகிய காலத்தில் நேரடிப் பேச்சுகளை ஆரம்பிப்பது தவிர்க்க முடியாதது - காலத்தின் கட்டாயம் - என்று அரசுத் தரப்புக் கருதுவதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவில் ஊர்வலம்

முல்லைத்தீவுக் கரையோரப் பகுதிகளில் அண்மையில் இலங்கை விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுமுன்தினம் விசுவமடுவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. தர்மபுரத்தில் இருந்து காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம் விசுவமடு பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்றும் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-164)



பிரான்ஸ் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி பயின்ற - பிரெஞ்சு மொழியில் சரளமாக உரையாடக்கூடிய - இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவை பிரெஞ்சு ஜனாதிபதி ஜக் ஷிராக் வரவேற்கின்றார்.

## பிரான்ஸ் அதிபரைச் சந்தித்து சந்திரிகா நேற்றுப் பேச்சு

பாரிஸ்,மார்ச்29

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரான்ஸ் போய்ச் சேர்ந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று பிரான்ஸ் ஜனாதிபதி ஜக் ஷிராக்கை எல்.ஸி. மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இரு தரப்பு விடயங்கள் குறித்து இரண்டு தலைவர்களும் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து பிரெஞ்சு அதிபருக்கு இலங்கை ஜனாதிபதி எடுத்துக் கூறியதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நட்புறவு நாடு என்ற வகையில் இலங்கை அரசு

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மக்கள் முன்னணி புனரமைக்கப்படும் சாத்தியம்!

புதுடில்லி,மார்ச்29

பிரிட்டன் மற்றும் பிற நாடுகளில் தமது இயக்கத்துக்கெதிராக விதிக்கப்பட்ட தடையை மீறி, அந்த நாடுகளில் செயற்படுவதற்கு வசதியாக "விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி" என்ற தமது முன்னைய அரசியல் பிரிவை புலிகள் மீண்டும் புனரமைப்பார்கள்.

தமிழ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஹிண்டுஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறது.

1989இல் ஜனாதிபதி பிரேமதாஸா - 'விடுதலைப் புலிகள் 'தேனிலவு' காலத்தில் நாட்டின் தேசிய அரசியலில் இணையும் நோக்குடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அப்போதைய பிரதித் தலைவர் மகேந்திரராஜாவை (மாத்தையாவை) தலைவராகவும், யோகரத்தினம் நரேனை (யோகியை) செயலாளராகவும் கொண்டு - கொழும்பு முகவரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாலுமிகளை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச்29

புலிகளின் காவலில் உள்ள தென்பகுதி மாலுமிகள் பதினொரு பேரையும் விடுதலை செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி நேற்று கொழும்பு கோட்டையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

சமாதானத்துக்கான பெற்றோர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. மாலை 4 மணியளவில் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாகக் கூடிய நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி கோஷங்களை எழுப்பினர். (ம-6)

## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

இதனை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மானிப்பாய் நகர எல்லைக்குள் மட்டும் இரவு 8 மணிமுதல் அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டிருக்கும் என்று பலாலி இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.(ம)

## புலிகள் மீதான தடை பிரிட்டனில் அமுலுக்கு!

லண்டன்,மார்ச்29

பிரிட்டனில் கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் உட்பட 21 அமைப்புக்களைத் தடை செய்யும் பிரேரணை பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணை மீதான விவாதம் முடிந்ததும் வாக்கெடுப்புக்கு விடப்படாமலேயே பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஏற்கனவே இந்தப் பிரேரணை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கடந்த 14ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. தற்போது பிரபுக்கள் சபையிலும் இது நிறைவேற்றப்பட்டுள்ளதை அடுத்து அந்தத் தீர்மானம் பிரிட்டனில் முழுமையாக நடைமுறைக்கு வந்துள்ளது.

இதனால் இந்தப் பயங்கரவாதப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 21 அமைப்புகளும் பிரிட்டனில் பகிரங்கமாக இயங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. (ம-6)

## படையினர் பாலியல் வல்லுறவு: பாதிப்புற்ற இரு பெண்களும் மருத்துவ பரிசோதனைக்கு!

### மன்னார் நீதிவான் உத்தரவு

வவுனியா,மார்ச்29

மன்னாரில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளை கைது செய்யப்பட்டு சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரு தமிழ்ப் பெண்களையும் உடனடியாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.எச்.எம்.அஸ்மீ நேற்று உத்தரவிட்டார்.

கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர்கள் சிறை அலுவலர்களால் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

தங்களைக் கைது செய்த கடற்படையினரும் கிளர்ச்சித் தடுப்புப் பொலீஸாரும் தம்மைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதுடன் கடுமையாகத் தாக்கியதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரச பயங்கரவாதம் குறித்து பிரிட்டன் கவனம் செலுத்தாதது அதிர்ச்சி தருகிறது

### தமிழ்க் கட்சிகள் கூட்டாக பிரிட்டிஷ் தூதரிடம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்29

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்துள்ள பிரிட்டன், இலங்கை அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளை கவனத்தில் எடுக்காதிருப்பது எமக்கு பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகின்றது.

- இவ்வாறு பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவரிடம் நேரில் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீஸ்ட்டை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சு நடத்திய போதே தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் பிரிட்டிஷ் தூதரிடம் மேலும் தெரிவித்ததாவது:-

அரச பயங்கரவாத நடவடிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் அராஜகத்திற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டத்துக்கு திட்டமிடுகிறார் மன்னார் ஆயர்

வவுனியா,மார்ச்29

"தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் கெடுபிடிகளைக் குறைக்கக் கூடிய வகையில் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டுள்ளோம்."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்.

மன்னாரில் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இரு பெண்களையும் நேரில் சென்று சந்தித்த பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

படையினரால் பாதிக்கப்பட்டுள்ள இந்த இரு பெண்களின் விவகாரத்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில்

உ

### மஹோற்சவகால தொடர் சொற்பொழிவுகள்

நிகழ்த்துபவர்கள் :- *பேராசிரியர் அ. சண்முகதாஸ்*
*கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்*

### பொருள் :- திருமுறைகள்

1. 'என் உள்ளம்கவர் கள்வன்'
2. 'இதுவோ எமையாளுமாறு'
3. 'வாசி தீரவே காசு நல்குவீர்'
4. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'
5. 'சலம்பூவொடு தூபமறந்தறியேன்'
6. 'தலையே நீ வணங்காய்'
7. 'மாதர் பிறைக் கண்ணியானை'
8. 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே'
9. 'ஈசன் எந்தை இணையடி நீழலே'
10. 'பித்தா பிறைசூடி'
11. 'மீளா அடிமை உமக்கே ஆளாய்'
12. 'வாழ்கின்றாய் வாழா நெஞ்சமே'
13. 'யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்'
14. 'புண் சுமந்த பொன்மேனி'
15. 'சங்கரா யார் கொலோ சதுரர்'

சொற்பொழிவுகள் இன்று (29-03-2001) முதல் 12.04.2001 வரை தினமும் மாலை உற்சவம் நிறைவு பெற்றதும் இரவு 7.00 மணி முதல் ஆலயத்தில் நடைபெறும்.

நன்றி

தலைவர்
*மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய*
*தர்மகர்த்தா சபை.*

(86003)

## தமிழ்த் திறன் போட்டி

தென்மராட்சி,மார்ச்29

2001ஆம் ஆண்டிற்கான பாடசாலை மட்ட தமிழ்த் திறன் போட்டிகள் ஏப்ரல் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்பட வேண்டுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா சகல பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

சுற்றறிக்கை கிடைக்காத பாடசாலைகளின் அதிபர்கள் கடந்த 1999, 2000 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் போட்டிகளை நடத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 - 04 - 1914 | 10 - 04 - 2000 |

அமரர்

### சபாபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

(விதானை, சின்னண்ணை)
**திதி: 29.03.2001 பஞ்சமி**

*ஆண்டுகள் பல சென்றாலும் மாறாது எம் துயரம்,*
*நேற்றுப் போல் இருக்கிறதே உங்கள் திருமுகம் கண்டு*
*மறக்க முடியவில்லையே உங்களை!*

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கந்தசாமி கோயிலடி,*
*இணுவில் மேற்கு.*
(86005)

*உங்கள் பிரிவால் துயருறும்*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## வெற்றிடங்கள்

**MSF** - பிரெஞ்சு வைத்திய அரசசார்பற்ற நிறுவனம் பிரெஞ்சு/ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு/தமிழ் மொழி பெயர்ப்பாளர் தேவை என்று அறிவிக்கின்றது.

இவ்விடயத்தில் கரிசனையுள்ளோர் திரு. கிறிஸ் தோபே லாகொஸ்ரே அவர்களுடன்

**MSF அலுவலகம்,**
*இல.49, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்*
என்ற முகவரியில்
தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல. 021-2274

(85983)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### தியாகராசசிவஐயர் இராசலட்சுமிஅம்மா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசசிவஐயர் இராசலட்சுமி அம்மா அவர்கள் நேற்று (28.03.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசசிவஐயரின் அன்பு மனைவியும், முன்னாள் வித்தியாதரிசி காலஞ்சென்ற மூகாந்திரம் சதாசிவஐயரின் மருமகளும், கணேஸ்வரசர்மா (ஓய்வுபெற்ற செயலாளர், சுன்னாகம் பிரதேசசபை),திருமதி நாகரத்தினம், குமாரசதாசிவசர்மா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), சரவணபவசர்மா(சமூக சேவை உத்தியோகத்தர், மட்டக்களப்பு), சுலோஜனா (கொழும்பு), கிருபாகரசர்மா (ஆசிரியர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), காலஞ்சென்ற ஸ்ரீதரன், வசந்தி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி ஐயர் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), மலர்மங்கை, கமலாதேவி, நா.சுப்பிரமணியம் (ஈஸ்வரன் பிறதேஸ்-கொழும்பு), மங்களாம்பாள் (ஆசிரியை, பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன்), நிரஞ்சனாதேவி(ஆசிரியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), க.இராமநாதன் (முன்னாள் இசை ஆசிரியர் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2001) வியாழக்கிழமை காலை 10மணியளவில் 224/3, பிறவுண் றோட், யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***224/3,*** *பிறவுண்றோட்,*
*யாழ்ப்பாணம்.*
(86002)

தகவல்:
தி.கிருபாகரசர்மா (மகன்)
(பபிஐயா)

### திருமதி செல்லத்துரை கனகம்மா

பொலிகண்டி, தம்பலடியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை கனகம்மா 22.03.2001 வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், செல்வமலர், இராசமலர், குலேந்திரராசா (சுவிஸ்), ரூபசவுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னையா, இராதாகிருஷ்ணன், இராசேந்திரன், கலாராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், இன்பமலர் (ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, கோப்பாய்), மதிவதனி (சுவிஸ்), மணிவண்ணன் (சுவிஸ்), சிவச்செல்வி (யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற யாழினி, கிரிதரன், ஜெயவாணி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜனார்த்தனன், மயூரன்(ஹாட்லிக் கல்லூரி), சித்தார்த்தன்(சுவிஸ்), தீபிகா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருத்திகா, செந்தூரன், நவீனன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.03.2001) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஊரணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*தம்பலடி,*
*பொலிகண்டி.*
(86010)

தகவல்:
செ.சின்னையா
(மருமகன்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.க.செபஸ்தியாம்பிள்ளை

(அதிபா B.A., Dip. in Ed., Sp. Trd, S.L.P.S. 2-1)

எமது வித்தியாலய அதிபர்
திரு. க.செபஸ்தியாம்பிள்ளை அவர்கள்
அதிபர் தரம் 2-1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையை
உளமாரப் பாராட்டுவதுடன்
மேலும் பல உயர்வுகள் பெற்று, வளம் பல நிறைவுற,
இறைவன் ஆசிவேண்டி,
இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்

*உப அதிபர், ஆசிரியர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

(85999)


## ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந்த்,
மீனா, பிரபுதேவா
நடிப்பில்
(C/15741)

**வானத்தைப்போல**

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜித்,
கார்த்திக், மீனா
நடித்த

**ஆனந்தப் பூங்காற்றே**

(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.)

(86004)

## லஷ்சுமி இணுவில்

கடைசி வாரமாக
விஜயகாந்த், மந்த்ரா,
செந்தில் நடிப்பில்

**சிம்மாசனம்**

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

(86018)

## மீண்டும் ஆரம்பம்

### விமலாஸ் சாவகச்சேரி

### விமலாஸ் மானிப்பாய்

எமது அன்பான வாடிக்கையாளர்கட்கு நற்செய்தி !

சாவகச்சேரி நகரில் உங்கள் சேவையில் காலத்தை வென்று தனக்கென தனியாக இடம் பதித்த **"விமலாஸ்"** பாதணி , அழகு சாதன பொருள் விற்பனை நிலையம் மீண்டும் மானிப்பாயில் 28.03.2001 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர் ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வழமைபோல் மலிவு விலையில் பாதணி வகைகள் , பாடசாலை பைகள் கடிகார வகைகள் மற்றும் பல ஆடம்பர பொருட்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

"விமலாஸ்"
மக்கள் வங்கி அருகில்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்,

உரிமையாளர் :- S.K.நவரத்தினம்

(86008)


### சின்னத்தம்பி சண்முகம்

சட்டம்பியார் வளவு கொற்றாவத்தையைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகம் கடந்த (24-03-2001) சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புக் கணவரும் பாலபரமேஸ்வரி, ஆறுமுகதாசன், வாசுகி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சண்முகராஜா (குளோபல்), சசீலா, பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதித்தன், அரவிந்தன் (தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ்.மாநகர சபை உறுப்பினர்), அச்சுதன்(கனடா), பாமா, சிந்துஜா, அருண், பிரிந்திகா, தர்சிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2001) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொலிகண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொற்றாவத்தை,*
*கரணவாய் வடக்கு,*
*வல்வெட்டித்துறை.*
(86015)

தகவல்:
ச.ஆறுமுகதாசன்
(மகன்)

# உதயன்

## நோக்கம் என்ன?

மட்டக்களப்பு மாவட்டத்தில், விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது, மிகப் பெரும் எடுப்பில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட இருப்பதாகப் பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர். அதி நவீன போர் விமானங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் கொண்டு தாக்குதல்கள் நடத்த உள்ளதால் புலிகளின் நிலைகளிலிருந்து, முகாம்களிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களை வேறு கேட்டிருக்கின்றனர் படையினர்.

இந்த அறிவித்தல் குறித்த செய்தியைப் படித்ததும் யாழ்ப்பாணத்தில் 1990 ஆம் ஆண்டுக்கும் 1995 ஒக்ரோபருக்கும் இடையில் விமானப் படையினர் வானத்திலிருந்து ஹெலிக்கொப்டர்கள், விமானங்கள் மூலம் இதே பாணியில் குடாநாட்டு மக்களுக்கு வேண்டுகோள் பிரசுரங்கள் தூவியது நினைவுக்கு வருகிறது.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மற்றும் முகாம்கள் மீது என்று கூறிக்கொண்டு படையினர் நடத்திய விமானத் தாக்குதல்களும் எறிகணை வீச்சுக்களும் இப்பிரதேசத்தில் ஆயிரமாயிரம் மக்கள் குடியிருப்புகளையும் ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள், பாடசாலைகள் என்று பொதுக் கட்டடங்களையும் கற்குவியல்களாக்கின என்பது மறைக்க முடியாத உண்மையானது.

இந்த மாவட்ட மக்கள் மட்டுமன்றி, குடாநாட்டில் கடந்த ஆறு வருடங்களாகச் சேவையாற்ற வந்து செல்லும் படையினரும் கூடச் சாட்சிகளாவர். இது குறித்துத் தனிப்பட்ட முறையில் கவலை தெரிவித்த அதிகாரிகள் பலர்.

நவீன போர் விமானங்கள், ஆயுதங்கள் இல்லாத அந்தக் காலத்திலேயே வெளியில் இருந்து கற்பனையும் செய்து பார்க்க முடியாத அளவுக்கு உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன என்றால், உயிர்ச் சேதங்கள் குறித்துச் சொல்லவேண்டியதில்லை.

இப்போது, அதிநவீன விமானங்களையும் ஆயுத தளபாடங்களையும் வைத்துக் கொண்டு ''புலிகளின் நிலைகள்'' மீது மட்டக்களப்பில் தாக்குதல் நடத்தினால் உயிர், உடைமை அழிவு எத்தனை மடங்கு அதிகமாக இருக்கும் என்பதனை இலகுவில் மதிப்பிடலாம். வடக்கை அழித்தது போதாது என்று கிழக்கையும் நிர்மூலமாக்கவேண்டும் என அரசு ''ஆர்வம்'' கொள்வது ஏனோ?

சமாதானப் பேச்சுகள் நடத்துவதிலேயே அரசுக்கு அக்கறை. இவ்விவகாரத்துக்கு இராணுவத் தீர்வு கிடையாது என்று மூன்று நாள்களுக்கு முன்னரும் அடித்து முழங்கியிருந்தார் முப்படைகளின் பிரதம தளகர்த்தர் — ஜனாதிபதி. ஆனால் அவரது ஆணைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்ட படையினர் யாழ்ப்பாணத்தைப் போன்று மட்டக்களப்பையும் கட்டடங்களின் இடிபாடுகளாகவும் மயான பூமியாகவும் மாற்றுவதற்குக் கங்கணம் கட்டி நிற்பது புரியாத ஒன்றாக உள்ளது.

சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இத்தகைய தாக்குதல்களுக்குத் திட்டமிடுவது ஏன்?

அரசாங்கம் போர் நிறுத்தம் செய்யாமல் இருப்பதன் உரிய பயனை அடையவேண்டும் — அதாவது தமிழர் பிரதேசங்களை இயன்றளவு நிர்மூலமாக்கிவிடவேண்டும் — என்பதற்கான முயற்சியா?

அல்லது —

பேச்சுவார்த்தைக்காகக் கனியும் சாதகமான சூழ்நிலையை குழப்பி விடுவதா? நோக்கம் என்ன?

# நிவாரணப் பொருள்களை பரிசீலிக்க ஏழு பேர் கொண்ட குழு நியமனம்

## தரம் இல்லை என்றால் துறைமுகத்தில் தடுக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொழும்பில் இருந்து கப்பலில் அனுப்பி வைக்கப்படும் நிவாரணப் பொருள்களைப் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து அதன் தரத்தைப் பரிசீலிப்பதற்கென யாழ். அரசாங்க அதிபரினால் 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் பரிசீலித்த பின்னர் பொருள்கள் தரமானதாக இருந்தால் மக்களுக்கு விநியோகம் செய்ய அனுமதிக்கப்படும். இல்லையேல் பொருள்கள் யாவும் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்படும் என்று குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். செயலக அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் அலுவலக அதிகாரி, விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரி, பாவனையாளர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதி, ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர் அல்லது பொதுமுகாமையாளர் ஆகியோர் குழுவில் அங்கம் வகிப்பர். (ஐ-10]

## ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை தெரிவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

நீர்வேலி ப.நோ.கூ. சங்கத்தின் இயக்குநர் சபைத் தெரிவுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் அறிவித்துள்ளார். (க-10)

## மெய்வன்மைப் போட்டி

குருநகர், மார்ச் 29

யாழ். புனித றோக்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் பிரதம விருந்தினராகவும், யாழ். பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு ஆ. அன்ரன் அமலதாஸ், சென். றோக்ஸ் சனசமூக நிலையப் போசகர் ஏ. ஆ. ஜெராட் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (உ-51)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 29

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் கழகங்களிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

★ அளவெட்டி தெற்கு அளவை இளைஞர் கழகம் எதிர் பன்னாலை கணேசன் இளைஞர் கழகம்.

★ மல்லாகம் இளைஞர் கழகம் எதிர் காங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் கழகம்.

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

★ சுன்னாகம் கலைவாணி வி.க. எதிர் கொக்குவில் வராகி வி.க

[உ-ம-86]

# கொக்குவிலில் ஒரே இரவில் இரு வீடுகளில் திருட்டுக்கள்

## அபகரித்த ஆவணங்கள் மற்றைய வீட்டில்

வலி. வடக்கு, மார்ச் 29

ஒரே இரவில் கொக்குவில் கிழக்கில் இரண்டு வீடுகளில் நகைகள், பணம் திருடப்பட்டுள்ளன.

கொக்குவில் பிறவுண் வீதியிலேயே செவ்வாய்க்கிழமை இரவு இத் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

அரியாலையில் இருந்து இடம்பெயர்ந்தவரான க. சேகர் என்பவரின் வீட்டில் பணம் 8 ஆயிரம் ரூபா உட்பட வங்கிப் புத்தகம், இராணுவ அனுமதிப்பத்திரம், நிவாரண அட்டை போன்றவை அபகரிக்கப்பட்டுள்ளன,

அதே வீட்டில் நித்திரையாக இருந்த பெண்ணின் கையில் உள்ள வளையலைக் கழற்ற முற்பட்டபோது அவர் கூக்குரலிடவே திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற வீட்டுக்கு அருகில் பொன்னு கண்மணி என்ற வயோதிபப் பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியும் அபகரிக்கப்பட்டது.

ஜன்னல் கண்ணாடியை உடைத்து உள்ளே சென்ற திருடன், சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளான்.

சேகர் வீட்டில் அபகரிக்கப்பட்ட ஆவணங்கள் பொன்னு கண்மணி வீட்டில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டு அவர் அவற்றை கோப்பாய் பொலீஸில் ஒப்படைத்துள்ளார்.

இத் திருட்டுக்கள் பற்றி யாழ்ப்பாணம், கோப்பாய், பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (க-86)

# ஆசிரிய கலாசாலை அனுமதிக்கு இம்முறை புதிய நிபந்தனைகள்

அச்சுவேலி, மார்ச் 29

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்குப் புதிதாகப் பயிற்சி நெறிகளுக்கு சேர்த்துக் கொள்ளும்போது குறிப்பிட்ட ஆசிரியர் பயிற்சி பெறவிருக்கும் பாடத் துறைக்கு நியமனம் பெற்றிருக்க வேண்டும் என்பதும் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் அவர் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண் என்பதும் கட்டாயமாகும்.

இந்த இரு நிபந்தனைகளும் கக் கண்டிப்பாகப் பின்பற்றவிருப்பதாக அறியப்படுகின்றது.

நியமனம் பெற்ற பாடத்துறையில் உயர் தகைமை பெற்றிருக்காது விட்டால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஆரம்பக் கல்வி பாட நெறியில் பயிற்சி பெறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி அடையாமல் விசேட பாடத் துறைகளில் பயிற்சி பெற்றிருப்பதும் நியமனம் பெற்ற பாடத் துறைகளில் பயிற்சி பெறாமல் பாடத்துறைகளை மாற்றிப் பயிற்சி பெற்றிருப்பதும் — கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து புதிய நடைமுறையைக் கண்டிப்பான முறையில் கடைப்பிடிப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

இதேவேளை —

ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் எதிர்வரும் 2, 3 ஆம் திகதிகளில் நடைபெறும் பரீட்சைகளுடன் தமது முதலாம் ஆண்டு கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கான 2 ஆம் ஆண்டின் முதலாம் தவணை ஏப்ரல் 25 ஆம் திகதி ஆரம்பிக்கும்.

புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சையும் ஏப்ரல் கடைசி வாரத்தில் நடைபெறும். அவர்கள் மே 14 ஆம் திகதி முதல் உள்வாங்கப்படுவர். (க-11)

# ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து டாக்டரைத் தீண்டிய பாம்பு!

## மந்திகை மருத்துவமனையில் சம்பவம்

தென்மராட்சி, மார்ச் 26

மந்திகை ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர்களை பரிசோதிக்கும் அறைக்குள் புகுந்த புடையன் பாம்பு ஒன்று, அங்கு நோயாளரைப் பரிசோதித்துக் கொண்டிருந்த மருத்துவரைத் தீண்டியது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. டாக்டரை பாம்பு தீண்டியதும் அங்கு சிகிச்சை பெறக் காத்திருந்த நோயாளர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

நோயாளர்களுடன் எடுத்துவரப்பட்ட பொதிகளுக்குள் இருந்த இந்தப் பாம்பு, ஆஸ்பத்திரிக்குள் வந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை -

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறைப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த கற்களை அகற்றிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் பாம்பினால் கடியுண்ட நிலையில், மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை நிரஞ்சன் (வயது 20) என்னும் இளைஞரே பாம்பினால் கடியுண்டவராவார். [ஜ-117]

# மிளகாய்ச் செடிகளுக்கு புதிய வகை 'பூச்சிக் கொல்லி'!

## யாழ். விவசாய ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தால் புதிய 'பூச்சிக் கொல்லி' ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அதன் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மிளகாய்ச் செடிகளில் இலைச்சுருள் சிக்கலை ஏற்படுத்தும் பனிப் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இதுமிகவும் உகந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

உள்ளிக்கரைசல், வேப்பம் விதைகள், மாட்டின் சிறுநீர் மற்றும் சில இரசாயனப் பதார்த்தங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி இப்பூச்சிக் கொல்லி தயாரிக்கப்பட்டுள்ளது

இப்பூச்சிக் கொல்லியைப் பயன்படுத்தி கத்தரி நாற்றுக்களில் ஏற்படும் 'தண்டுக்காய் துளைப்பான்' எனும் பூச்சியையும் கட்டுப்படுத்த தொடர்ந்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பூச்சிக்கொல்லி விரைவில் விவசாய விரிவாக்கங்கள் ஊடாகவும், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் ஊடாகவும் மற்றும் நேரடியாகவும் விவசாயிகளின் பாவனைக்கு பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### அண்ணல் அருள்செய் அமர்விடம்

விண்ணவர் நாளும் வணங்கியும் வாழ்த்தி
வந்து மறைநெறி வளர்ப்பர்
மண்ணவர் மறைவயவர் மனவிருள் அகற்றி நல்
லாகம மரபுவழி போற்றுவர்
அண்ணலார் எம்பெருமான் அம்பிகைபாகமாய் அவர்க்
கருள்செய் அமர்விடம் வினவில்
வண்ணவண்ண வாம் பொழில் பண்ணைகள் மருவும்
யாழ்ப்பாண நன்னக ரதுவே.

சிவ. சண்முகவடிவேல்

(இன்று 11 ஆம் திருவிழா)

## நாளை

பங்குனி 17
வெள்ளிக்கிழமை
திதி: பஞ்சமி
காலை 6.23 வரை.
ஷஷ்டி
பின் இரவு: 4.50 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
முன் இரவு: 7.50 வரை.
சுபநேரம்: 06.13—07 43
ராகுகாலம்: 10 43 — 12.13
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஓநாயுடன் நீ வசித்தால் ஊளையிடத்தான் கற்றுக் கொள்வாய்.

# கல்வியியற் கல்லூரி மாணவருக்கு மேலும் 500 ரூபா கொடுப்பனவு

## நாடாளுமன்றில் கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 29

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, வழங்கப்பட்டு வரும் மாதாந்த உதவு தொகைக் கொடுப்பனவுகள் மேலும் 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

கல்வி உயர்கல்வி அமைச்சுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:—

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, இது வரை உதவு தொகையாக ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த உதவு தொகையை 500 ரூபாவால் அதிகரித்து ஒவ்வொரு மாணவருக்கும் ஆயிரத்து 500 ரூபா மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

ஆயிரம் ரூபா நிதி, மாணவர்களுக்கு போதாமல் இருந்ததாலேயே தற்போது வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 500 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை—

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுவந்த ஆயிரம் ரூபா நிதி, உணவுத் தேவைக்கே போதாமல் இருப்பதாகக் கூறி, விடுதி மாணவர்களுக்கு காலையிலும் இரவிலும் பாண் வழங்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிதி அதிகரிப்பின் மூலம் தேசிய கல்வியியற் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு தரமான உணவுகளை வழங்கக்கூடியதாக இருக்கும் என்று கல்வியியற் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-6)

# கற்கேணியை புனரமைக்க நடவடிக்கை

வலி. தென்மேற்கு, மார்ச் 29

நவாலி தெற்கு கற்கேணியை ஆழமாக்கி கால்நடைகள் பயன்பெற மானிப்பாய் கிராம அலுவலக நிர்வாக அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினர் கேட்டுக் கொண்டதை அடுத்தே இந்த கற்கேணி விரைவில் மானிப்பாய் கிராம அலுவலக பணியாளர்களினால் திருத்தப்படவுள்ளது.

இதேவேளை —

நவாலி ஆரியம்பிட்டி மைதானம் சிரமதான அடிப்படையில் திருத்தப்பட்டு வருவதாகவும் மானிப்பாய் கிராம அலுவலக நிர்வாக அதிகாரி சு. கிருபாகரன் தெரிவித்தார்.

[க-85]

## ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை:

# விண்ணப்பக் கட்டணத்தை ஏற்க தபால் அதிபர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 29

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

ஆனால் சில தபால் நிலையங்களில் 23 ஆம் திகதிக்குப் பின்னர் பரீட்சை விண்ணப்பக் கட்டணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்தமையால் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது: ஆவ்வாறான சுற்றறிக்கை ஒன்று முன்னர் தமக்குக் கிடைத்ததாகவும் தற்பொழுது இவ்விடயம் பற்றித் தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தியதை அடுத்து 31 ஆம் திகதி வரை பரீட்சைக் கட்டணத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளதாகவும்

'உதயனுக்கு' தெரிவித்தார்.

எனவே சகல தபால் அதிபர்களும் பரீட்சை கட்டணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்

(க-10-117)


# குருக்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யம் மிக்க ஆலயம் ஒன்றுக்கு குருக்கள் ஒருவர் உடனடியாகத் தேவை. தன்னுடன் உதவிப் பூசகரையும், பரிசாரகரையும் நியமிக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். சம்பளம் மற்றும் கடமைகள் பற்றிய விவரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

2.4.2001 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:- விள. இல. 1250,
மே/பா உதயன். (85993)



# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
திருமதி சிவானந்தவல்லி சுகுமார் (பாமா)
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி தங்கமணி சச்சிதானந்தம்

அவர்கள் நேற்று 28—03—2001 வவுனியாவில் காலமாகியதையிட்டு, அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி. மேற்குப் பிரதேச செயலக
நலன்புரிச் சங்கம், சங்கானை.

(86001)


# யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறை விஸ்தரிப்புக்கு 10 லட்சம் ரூபா

## ஒதுக்க சுகாதார அமைச்சர் இணக்கம்

கொழும்பு, மார்ச் 29

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையை விஸ்தரிக்கவும், அங்கு குளிரூட்டி பொருத்திய அறைகளை அமைப்பதற்கும் சுகாதார அமைச்சர் ஜோன் செனவிரத்ன 10 லட்சம் ரூபாவை உடனடியாக ஒதுக்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் அமைச்சர் ஜோன்செனவிரத்னவின் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட, ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராஜா யாழ். வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் இடப் பற்றாக்குறை மட்டுமன்றி உரிய வசதிகளும் இல்லை.

இதனால் சடலங்களை சில தினங்களுக்குக் கூட வைத்திருக்க முடியாத நிலை காணப்படுகிறது என்று அமைச்சரிடம் எடுத்துக் கூறினார். குளிரூட்டி வசதியின்றி சடலங்கள் பழுதடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பிரேத அறையினை விஸ்தரிக்கவும் அங்கு குளிரூட்டிகள் பொருத்திய அறைகளை அமைக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சரை தவராஜா கேட்டுக்கொண்டார்.

அதனை அடுத்தே 10 லட்சம் ரூபாவை உடனடியாக ஒதுக்கிப் பிரேத அறையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுப்பதாகச் சுகாதார அமைச்சர் உறுதி வழங்கியுள்ளார்.

யாழ் குடாநாட்டில் புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவமனை ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம். பி. அமைச்சரிடம் கோரியுள்ளார். நாட்டில் புற்றுநோய் சிகிச்சைக்கான கருவிகளை இயக்குவதற்கு போதியளவு பயிற்சி பெற்றவர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் கருவிகளை இயக்குவதற்குரிய ஆளணியைத்திரட்டியபின்னர் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனையை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் குழுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

[க]

# அச்சுவேலியில் டாக்டர்கள் பற்றாக்குறை

வலி. தென்மேற்கு, மார்ச் 29

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறை காரணமாக முழுமையான சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

தினமும் 400 முதல் 600 வரையிலான நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் —

எனினும் வெளிநோயாளர் பிரிவில் இரண்டு வைத்தியர்களே மாறி மாறி கடமையாற்றி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-185)

# அரச பொதுஊழியர் சங்க மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 7 ஆவது வருடாந்த மாநாடு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு கல்முனை உவெஸ்கா உயர்தர பாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெறும்.

அன்றைய தினம் இந்தத் தொழிற்சங்கத்தின் இணை நிறுவனமான ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தெரிவும் இடம்பெறும்,

(க-173)

# வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட இளைஞர் கைது

## அவரின் மாமனார் வழக்குத் தாக்கல்

வவுனியா, மார்ச் 29

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் வவுனியா மேல் நீதிமன்றத்தால் குற்றமற்றவர் எனக்கூறி விடுதலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் மீண்டும்பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையை எதிர்த்து வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சற்குணபாலன் பிரதாபன் (வயது - 23) என்ற இளைஞரே பொலீஸாரால் கைது செய்யப்பட்டவராவார். இவர் தற்போது வவுனியாவில் வசித்து வருகின்றார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;-

ஒட்டுசுட்டானில் வைத்து 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இவர் கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி போதிய சாட்சிகள் இல்லை என்று கூறி சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் படி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டார்.

இருமாதங்களின் பின்னர் கடந்த 22 ஆம் திகதி மகாறம்பைக்குளம் பகுதியில் வைத்து வவுனியா கிளர்ச்சித் தடுப்புப் பொலீஸார் இவரை மீண்டும் கைது செய்துள்ளனர்.

இவரைக் கைது செய்து நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்தாமல் தடுத்து வைத்திருப்பது சட்டத்துக்கு விரோதமானது

நோய்வாய்ப்பட்டிருக்கும் இவரை உடனடியாக வவுனியா மேல் நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என்று கோரி வவுனியா மேல் நீதிமன்றில் இளைஞரின் மாமனார் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி சம்பந்தப்பட்டவர்களை நாளை 30 ஆம் திகதி ஆஜர்ப்படுத்துமாறும் அறிவித்தல் அனுப்புமாறும் உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

(க-6)


# போதனாசிரியர் விண்ணப்பம்

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

இப் பிரதேச சபைக்குட்பட்ட அதிகாரப் பரப்புக்குள் வடக்கு — கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் செயற்படுத்தப் படவிருக்கும் பின்வரும் ஐந்து துறைகளுக்கான பயிற்சி நெறிகளில் பங்குபற்றவிருக்கும் பயிற்சியாளர்களுக்கான விரிவுரைகளை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 03 - 04 - 2001 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக ''வலி. கிழக்கு பிரதேச செயலர், கோப்பாய்'' அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

- பழங்கள் பதனிடல்
- விவசாய உபகரணங்கள் திருத்தம் செய்தல்
- இரும்பு உருக்கு கைத்தொழில்
- அலுவலக உபகரணங்கள் திருத்துதல்
- கொங்கிறீற் கல் செய்தல்

கல்வித் தகைமைகள் :-

தமிழ், கணிதம்/விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி

வயது

விண்ணப்பிக்கும் திகதியன்று 21 - 40 வயதுக்குள்

அநுபவம்

1. உரிய துறையில் அங்கிகரிக்கப்பட்ட ஒரு தொழில் நிறுவனத்தில் குறைந்தது ஒருவருட டிப்ளோமா பயிற்சி.
2. 03 வருட வேலை அனுபவம்.

குறிப்பு; இப்பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பூ. குணசிங்கம், ஜே. பி. யு. எம்.
தவிசாளர்,
வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
28 - 03 - 2001 (சி-15953)

# வடக்கு - கிழக்கு — மலையக தமிழர்களைப் பிரிக்கச் சதி!

## அனுருத்தவுக்கு சந்திரசேகரன் கடிதம்

கொழும்பு,மார்ச்29

வடக்கு-கிழக்கு, மலையகம் எனப பிரதேச ரீதியாக தமிழர்களைப் பிரிக்கவும் தமிழர்கள் மத்தியில் நிலவும் ஐக்கியம், நல்லுறவு ஆகிய வற்றை சிதைக்கவும் உயர் பொலீஸ் அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் எச்சரித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் பொலீஸ் அதிகாரிகள் ஏற்பாடு செய்த கூட்டம் ஒன்றில் பொலீஸ் அதிகாரிகள் வெளியிட்ட கருத்துக்களை கண்டித்து அவர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமையன்று 'சமாதானக் கூட்டம்' என்ற பெயரில் பொலீஸார் மற்றும் புலனாய்வுத் துறையினரால் தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோயில் மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய பொலீஸ் உயர் அதிகாரிகள் பிரதானமாக நான்கு விடயங்களை வலியுறுத்தி பேசியுள்ளனர் என்று அறிகின்றேன்.

✲ மலையகத் தமிழர்கள் எவரும் வடக்கு-கிழக்கு தமிழர்களோடு திருமண உறவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

✲ வடக்கு-கிழக்கு தமிழர்கள் எவரும் மலையகத்தில் அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் அனுமதிக்கக் கூடாது.

✲ மலையகத்தில் பணிபுரியும் வடக்கு-கிழக்கு ஆசிரியர்களின் நடவடிக்கைகளில் அவதானமாக இருக்க வேண்டும்.

✲ இங்கு ஆலயங்களில் உள்ள மதகுருமார்களின் செயற்பாடுகளில் அவதானமாகவும், அவர்களின் திட்டங்களைக் கண்டறியவும் வேண்டும்.

இப்படியான பேச்சுக்கள் மக்களிடையிலான நல்லுறவை அடியோடு நாசப்படுத்துகின்ற நச்சுக்கருத்துக்கள் ஆகும். ஒரு சமூகத்தையே குற்றவாளியாக்கி தலைமைப்படுத்துகின்ற மனிதாபிமானமற்ற அநாகரிக செயற்பாடாகும்.

ஓர் இனத்தின் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி தமது நோக்கத்தில் வெற்றி அடைந்தவர்கள் என்று எவருமே உலக வரலாற்றில் இல்லை.

இந்தக் கீழ்த்தரமான பிரசாரத்தை தங்களின் அமைச்சின் கீழ் உள்ளவர்கள் மேற்கொண்டிருப்பதற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு தங்களுக்கு உள்ளது.

நமது நாட்டில் யுத்த நிறுத்தம் பற்றியும், இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு, சம அந்தஸ்து பற்றியும் உலகளாவிய ரீதியில் பேசப்படும் காலகட்டம் இது.

எனவே இது விடயமாக உடனடியான விசாரணையின் மூலம் தகவலகளை அறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-9)

# குடாநாட்டுத் தென்னைகளில் ஈக்கில் கருகல் நோய்த் தாக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

குடாநாட்டில் தென்னை மரங்கள் 'ஈக்கில் கருகல்' நோயின் தாக்கத்திற்கு இலக்காகி இருப்பதாக தென்னை அபிவிருத்தி சபையின் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.தனிநாயகம் தெரிவித்தார்.

கருவண்டுகளின் தாக்கமே இது என முதலில் நம்பப்பட்ட போது பங்கஸ் நுண்ணுயிரால் ஏற்படும் ஈக்கில் கருகல் நோயே இது எனத் தற்போது இனங்காணப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தென்னை மரங்களில் இந்நோயின் தாக்கம் ஏற்பட்டால் உடனடியாக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## சாயி சிந்தனை



பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் நீண்ட கால பக்தர் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் 12.03.1999அம் ஆண்டு புதுடில்லியில் ஸ்ரீ சத்திய சாயி அகில உலக மைய கேந்திரத்தின் திறப்பு விழாவின் போது ஆற்றிய உரை:-

நான் பிரதம மந்திரி என்ற முறையில் இங்கு வரவில்லை. பல்லாண்டுகளாக பகவானின் பக்தன் என்ற முறையில் இங்கு வந்துள்ளேன்.(கரவொலி) பதவியில் இருந்தாலும் இல்லாவிடினும் பகவானை வணங்கவும் அவரது அருளாசிகள் பெறவும்

### உழைத்து இறைவனை அடைய முயற்சி செய்!

அவரிடம் அறிவுரை பெறவும் எப்போதும் சென்று வருகிறேன். இப்போது சாதாரண அறிவுரைக்கு மேற்பட்ட அறிவுரை தேவைப்படுகிறது. எனக்கு மட்டுமல்ல நாடு முழுவதற்குமே பகவான் தேவைப்படுகிறார்.

ஆகவே பகவான் புதுடில்லிக்கு ஆண்டுக்கு ஒரு முறையாவது வர வேண்டும். எவ்வாறு யாருமறியாத குக்கிராமமாக இருந்த புட்டபர்த்தி இப்போது ஒரு பல்கலைக்கழகம், ஒரு சூப்பர் ஸ்பெஷலிட்டி ஆஸ்பத்திரி, ஒரு விமான நிலையம் இவை கொண்ட முன்னேற்றமுள்ள சிறு நகரமாக அதிசய மாற்றங் கொண்டுள்ளது.

இது நமது சொந்தக் கிராமத்தை நாம் எவ்வாறு போற்றி வளர்க்க வேண்டும் என்பதற்கான முன்னுதாரணம் மட்டுமல்ல மனித சமுதாயத்திடம் ஸ்வாமி கொண்டுள்ள தன்னலமற்ற அன்பின் பிரதி பலிப்பம் கூட.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா கூறுகிறார்; "வெறுமனே கடவுளைப் பற்றி நினைத்திராதே! உழைத்து இறைவனை அடைவதற்கான முயற்சியைச் செய்; இறைவனிடம் அன்புகொள். இறைவனை நேசிப்பதற்கான சிறந்த வழி எல்லோரையும் நேசித்து, எல்லோருக்கும் சேவை செய்"

(ஆதாரம்:- ('இறைவனோடு இனிய பயணம்'))

# இவர்களுக்கு உதவுங்கள்

பெற்றோரைப் போருக்குப் பலிகொடுத்து நிராதரவாகியுள்ள எமது மண்ணின் எத்தனையோ சின்னஞ்சிறுசுகள் நால்வரின் நிலை குறித்து"

**இவர்கள் யார்? இவர்களது எதிர்காலம் என்ன? இவர்களைப்போல் இன்னும் எத்தனை பேர்? - என்ற தலைப்பில் -**

குண்டு மழைக்குள் சிக்கி தாயும் தந்தையும் உயிரிழக்க காயம் எதுவுமின்றி அதிசயமாகத் தப்பிய ஓர் ஆண் குழந்தையினதும் அதன் சகோதர சகோதரிகளினதும் ஆதரவற்ற நிலையை -

**இம்மாதம் பத்தொன்பதாம் திகதிய உதயனில் விஸ்தாரமாக வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருந்தோம்.**

இந்தச் சிறுவர் சிறுமியர் நால்வருக்கும் உதவும் நன்னோக்குடன், மனிதாபிமான சிந்தையுடன் யாழ். றோட்டறிக்கழகம் நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்தப் பிஞ்சுகளின் நலனில் அக்கறை கொண்டு உதவ விரும்பும் கருணை உள்ளம் கொண்டோரைத் தாம் ஆரம்பித்துள்ள 'றோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம் - மாசாரில் பாதிக்கப்பட்டோர் நிதி' இற்கு உதவுமாறு அவர்கள் கேட்டுள்ளார்கள்.

இந்த நிதிக்கு நன்கொடை வழங்குபவர்கள், மக்கள் வங்கி கன்னாட்டிக் கிளை சேமிப்புக் கணக்கு இலக்கம் - **101878**இற்கு பணமாகவோ காசோலையாகவோ அனுப்புமாறு யாழ். றோட்டறிக்கழகத்தினர் கேட்டுள்ளனர்.

ஒரே கணத்தில் குண்டுக்கு இரையாகிய மாசாரைச் சேர்ந்த கு. சிறிதரன் - சி. லோகேஸ்வரி தம்பதிகளின் 4 குழந்தைகளுக்கும் வாழ்வளிக்க விரும்பும் காருண்ணியம் படைத்த சகலரின் உதவிகளையும் கோரி நிற்கின்றனர் றோட்டறிக் கழகத்தினர். (அ)



பெற்றோரை இழந்துவிட்ட நான்கு பிஞ்சுகளில் நான்காவது ஆண் குழந்தை ஜெனாஷன்

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில் இம் மாதம் 28ஆம் திகதிவரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**கோப்பாய்**

(163806ஏ) (163806பி) (163806சி)
(173299ஏ) (177396ஏ) (177396பி)
(177396சி) (179757ஏ) (179757பி)
(179757சி) (180679ஏ) (180679பி)
(180679சி) (180679டி) (180693ஏ)
(180694ஏ) (180694பி) (180714ஏ)
(180714பி) (180767ஏ) (180767பி)
(180767சி) (180770ஏ) (180770பி)
(180780ஏ) (180780பி) (180790ஏ)
(180790பி) (180843ஏ) (180945ஏ)
(180945பி) (180964ஏ) (180964பி)
(180995ஏ) (181039ஏ) (181039பி)
(181039சி) (181042ஏ) (181042பி)
(182898ஏ) (182946ஏ) (182963ஏ)
(182963பி) (182963சி) (182963டி)
(182963ஈ) (182972ஏ) (182972பி)
(182993ஏ) (183010ஏ) (183010பி)
(183012ஏ) (183024ஏ) (184042ஏ)
(184129ஏ) (184130ஏ) (184130பி)
(184130சி) (184130டி) (184130ஈ)
(184135ஏ) (184135பி) (184135சி)
(184135டி) (184137ஏ) (184165ஏ)
(184165பி) (184165சி) (186536ஏ)
(186581ஏ)

**நல்லூர்**

(170770ஏ) (170942ஏ) (171346ஏ)
(171473ஏ) (177183ஏ) (179794ஏ)
(179799ஏ) (179799பி) (184088ஏ)
(184088பி) (184088சி) (184088டி)
(184150ஏ) (184180ஏ) (184180பி)
(184180சி) (184180டி) (184192ஏ)

**சண்டிலிப்பாய்**

(170716ஏ)

**உடுவில்**

(179534ஏ) (179534பி) (184033ஏ)
(184086ஏ) (184093ஏ) (184102ஏ)
(184102பி) (184138ஏ) (184139ஏ)
(184140ஏ) (184141ஏ) (184142ஏ)
(184143ஏ) (184146ஏ) (184175ஏ)
(184175பி) (184175சி) (க-10)

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் சைவசமயத்தை நிலை நிற்கச் செய்த ஆலயங்களில் ஒன்றாகிய மானியம்பதி மருதடி விநாயகர் ஆலய கொடியேற்றத் திருவிழா இன்றாகும். தமிழரசர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட பிற்காலத்தில் இந்த ஆலயம் அமைந்திருக்காவிட்டால் இபபொழுது அவரை வணங்கும் அனேகர் பிற மதங்களைச் சேர்ந்தவர்களாக மாறியிருப்பர்.

மானிப்பாய் மருதடிப் பிள்ளையாா ஆலயக் கொடியேற்றத் திருவிழா தொடங்கி இரதோற்சவம், தீர்த்தத் திரு



விழா வரை எமது மக்களுக்கு விநாயகர் வழிபாடு மூலம் குறைகள் நீக்கி நிறைவு பெறும் முக்கியமான பயனுள்ள புண்ணிய நாள்களாக அமையும். எமது உள்ளங்களில் அருளாற்றல் உண்டாகும்.

காலத்துக்கு அதிக வலிமை உண்டு. காலத்தில் செய்வதற்கு அதிக பயன் கிட்டும். "பாலோடாயினும் காலமறிந்து உண்" என்பது பழமொழி. மருதடி விநாயகர் உற்சவ நாள்களில் மனம், மொழி, மெய்களால் விநாயகரை வழிபட்டு விரதமிருந்து ஆலய வழிபாடு செய்து திருமுறைகளை ஓதி "ஓம் கணேசாயநம" என்னும் மந்திரத்தில் தொடங்கி "ஓம் அனந்தவானந்த சுகாய நம" என்னும் மகாமந்திரத்தை முடிவாகக் கொண்ட ஸ்ரீ கணேசப் பெருமானது திருநாமங்களை உச்சரிக்க வேண்டும்.

இப்புண்ணிய உற்சவத் தினங்களில் மனத்தூய்மையுடன் இறைவழிபாடு புரிபவர்கள் பாவங்களினின்றும் நீங்கிப் புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலங்களையும் எளிதில் பெறுவார்கள்.

மருதடி விநாயகர் ஆலயத்தின் தெற்கு வீதியில் உள்ள திருக்குளம் இவ்வாலயம் கட்டப்படுவதற்கு முன்னரே மக்கள் பிள்ளையார் குளம் என்று அழைத்து வந்ததாக வரலாறு உண்டு. போர்த்துக்கேயர் தமது ஆட்சிக் காலத்தில் இக்கோயிலை இடித்து இதனை ஒரு சேமக்காலை ஆக்கிவிட்டனர். இப்போதுள்ள ஆலயத்தின் கட்டட வேலைகள் தொடங்கிய பொழுது இவ்விடத்தில் மனித எலும்புகள் காணப்பட்டன என்று அறிய முடிகிறது.

போர்த்துக்கேயருக்கு அஞ்சி இரவு வேளைகளில் அவர்கள் கண்களில் அகப்படாத நேரங்களில் ஆலய மூலஸ்தானத்துக்குக் கிழக்கே உள்ள மருத மரத்தின் கீழ் பொங்கலிட்டு பூஜை செய்து விநாயகரை வழிபட்டனர். இவ்வாறு பொங்கல் வழிபாடு மறைவாக நடப்பதை மருதடி விநாயகர் பார்த்திருப்பாரா? இவர்கள் கொடுங்கோண்மையை நாற்பது ஆண்டுகளில் நிலைகுலையச் செய்ய அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது. சமய வெறியில் ஈடுபடாது பொருள் சேர்ப்பதிலேயே ஒல்லாந்தர் கருத்தாக இருந்தமையால் பொங்கல், வழிபாடு ஆகியவை மருதடியில் தடையின்றி நடைபெற்றன.

மருத மரத்தின் கிழக்குத் திசையை நோக்கி வைக்கப்பட்டடிருந்த விநாயகர் விக்கிரகம் ஒருநாள் தானாகவே மேற்கு நோக்கித் திரும்பி இருந்ததைக் கண்ட மக்கள் ஆச்சரியமடைந்தனர். கிழக்கில் கிறிஸ்தவ ஆலயம் கட்டப்படுவதாலோ அல்லது கீழ்த் திசையில் இருந்தால் உற்சவங்களை நடத்தப் போதிய இடவசதி இன்மையாலோ விநாயகர் மேந்கு நோக்கித் தானாகவே திரும்பியுள்ளார் என்பதை உணர்ந்த மக்கள் மருத மரத்தின் மேற்குத் திசையை நோக்கி கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டினார்கள் என்ற பழமையும் பெருமையையும் சரித்திர சான்றும் பெற்றது இவ்வாலயம்.

நாம் எதை எழுதத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி போட்டுவிட்டுத தான் ஆரம்பிக்கிறோம். இதற்கு காரணம் விக்கினம் இல்லாமல் எந்தக் காரியமும் நடக்க வேண்டும் என்ற நம்பிக்கைதான். மருதடி விநாயகர் தமிழ் புதுவருடம் ஆரம்பமாகும் நேரததில் அதி உன்னத அலங்காரம் அமையப் பெற்ற தேரில் ஏறி வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சியே எல்லோரும் கண்டு இன்புற்று விநாயகரை வணங்கி புதுவருட கருமங்களை ஆரம்பிப்பதால் நாமும் நாடும் நலம்பெற்று வாழலாம் என்ற நம்பிக்கை எமக் கெல்லாம் ஏற்படும்.

மானிப்பாய் மருதடி விநாயகரும் பல ஆற்றல் மிகு அற்புதங்களைச் செய்துள்ளார். மானியம்பதி இரகுநாத முதலியார் சின்னத்தம்பியார் அவர்கள் ஒரு முறை கொடிய விஷம் தீண்டப் பெற்று மருதடி விநாயகர் காப்பாற்றினால் தேர் செய்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்ததாகவும், அங்கனம் பிரார்த்தனை செய்ததன் மேல் அக்கொடிய விஷம் நீங்கி அவர் சுகம் பெற்று தேர் செய்து கொடுத்ததாகவும், விநாயகப் பெருமானின் அருளால் நீண்ட காலம் வாழ்ந்ததாகவும் அறியப்படுகிறது.

இன்றைய ஆலய பரிபாலன சபையோரின் ஆதரவில் நேரம் தவறாது ஆலயத்தின் தினசரி பூஜைகளும், விசேஷகால அபிஷேக ஆராதனைகளும், சமயச் சொற்பொழிவுகளும்,

**சமூக ஜோதி**
**கா.கணேசதாசன்**

கூட்டு வழிபாட்டு நிகழ்வும் பக்தர்களின் பேராதரவுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றன. மேலும் தாமரைக் குளம், நந்தவனம், ஆலய வீதி முதலியவற்றை புனரமைப்புச் செய்து புதிதாக பயனுள்ள ஓர் அன்னதான மடம் கட்டியுள்ளமை போற்றத்தக்க செயலாகும் மானிப்பாய் வாசிகள் மட்டுமின்றி நகரின் பிற பகுதிகளிலிருந்தும் இவ்வாலயத்தின் மகிமை அறிந்து வழிபட வரும் பக்தர்கள் ஏராளம்.

இன்று இவ்வாலயத்தில் நடைபெறும் கொடியேற்று வைபவத்தினூடாக ஆன்மாக்களை இறைவன்பால் இணைப்பதன் உட்பொருள் உணர்த்தப்பட்டுள்ளது. இன்று தொடங்கி உற்சவகாலம் முழுவதிலும் மனியம்பதியே புனித இடமாக விளங்கும். மக்கள் அனைவரும் தங்கள் உள்ளங்களிலுள்ள கோபம், காமம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்களை அகற்றி உள்ளங்களை தூய்மைப்படுத்தி விநாயகரை உள்ளங்களில் இருத்தி சாந்தம், அன்பு, அறிவு, உண்மை என்ற உள்ளொளி கமழ வழிபடும் காட்சி கண்களுக்கு இனிமையாக இருக்கும்.

மூவரும் தேவரும் ஏவரும் போற்றும் தனிப் பெரும் தெய்வம் விநாயகக்கடவுள், ஓங்கார உருவினர் எமது இடர்கள் யாவற்றையும் களைந்து அருள்புரிய வேண்டுமென விக்கின விநாயகனை நாம் அனைவரும் ஒன்று கூடி வணங்கி. சாந்தியும் சமாதானமும் அமைதியும் பெறுவோமாகுக.☆

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



செல்வன்

## விக்னேஸ்வரன் வினித்

அராலி கிழக்கு வாலை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த
திரு.திருமதி விக்னேஸ்வரன் – தயாழினி
தம்பதிகளின் செல்வப்புதல்வன்

வினித்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (29.03.2001) வியாழக்கிழமை பிரான்சில் உள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். வினித்தை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா, அராலிகிழக்கில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, தவராசா குடும்பம், ஆனந்தராசா குடும்பம், ஸர்வேஸ்வரன் குடும்பம், வவுனியாவில் வசிக்கும் ரகு குடும்பம், அத்தைமார்களான வாணி, சோபிகா, பெரியம்மா குடும்பம் மற்றும் யாபேரும் எல்லா நலமும்பெற்று பல்கலையும் கற்றுச் சிறப்புடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

அராலி கிழக்கு,
அராலி.

தகவல்:-
சு.மகேந்திரம்
(அப்பப்பா)

(85889)

# பழைய பித்தளை கொள்வனவு

சகல விதமான பழைய பித்தளைப் பொருள்களும் அதி உயர்ந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

**கொள்வனவு விலை கிலோவுக்கு ரூபா 65/-**

எவ்வளவு பித்தளையானாலும் கொள்வனவு செய்யப்படும்.

*விபரங்களுக்கு:-*

## செல்வா ஹாட்வெயர்ஸ்

120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2873

(C/15909)

# கண்ணீர் அஞ்சலி



தொண்டமனாறு செல்வச்சந்நிதி, ஆவரங்கால் சிவன் தேவஸ்தானங்களின் ஆஸ்தான வித்துவானும் இருபாலை நாதஸ்வர வித்துவான் லோகநாதன் அவர்களின் அன்புத் தந்தையும் ஆகிய

## அமரர் V.A.இராமையா

(நாதஸ்வர வித்துவான்)

அவர்களின் மறைவையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இராமநாதன் கலட்டி,*
*இருபாலை.*

ச.முருகையா
(தவில் வித்துவான்)

(85953)

## தவறவிட்ட அ.அட்டை, கடவுச் சீட்டு

காரைநகரைச் சேர்ந்த தையல்முத்து குழந்தைவேல் மற்றும் மாத்தளையைச் சேர்ந்த சின்னையா குழந்தைவேல் ஆகியோரால் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகளும் தையல்முத்து குழந்தைவேலு என்பவரின் கடவுச்சீட்டும் திருகோணமலை அருணகிரி வீதியில் உள்ள 'உதயன்' பதிப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மறவன்புலோ மாணவருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்29

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்விகற்று தற்பொழுது வேறு பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களில் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியவற்றைப் பெறத் தகுதியுடைய மாணவர்கள் தங்கள் விவரங்களைப் பதிவு செய்வதற்கு-

இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் வலயக் கல்விப் பணிமனைக்கு வருகை தருமாறு பாடசாலை அதிபர் ச.ஞானலிங்கம் கேட்டுள்ளார். (க)

## தாதிகள் பயிற்சி; நேர்முகப் பரீட்சை

யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றுவரும் தாதிகள் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இதுவரை கலந்து கொள்ளாதவர்களை உடன் கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் செல்வி ந.கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (க-10)

## சலவை நிலைய உரிமையாளரின் முன்மாதிரி

தென்மராட்சி,மார்ச்29

சலவைக்கென கடையில் கொடுக்கப்பட்ட உடுப்புக்குள் காணப்பட்ட 17 ஆயிரம் ரூபாவை உரியவரிடம் ஒப்படைத்தார் கடை உரிமையாளர்.

ஆவரங்காலில் உள்ள லோன்றிக்குச் சென்று பணத்தைத் தவறவிட்டவர் விசாரித்தார். அவ்வேளை அப்பணம் முழுவதையும் உரியவரிடம் ஒப்படைத்தார் உரிமையாளர்.

உரிமையாளரின் இச் செயலை இப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டினர். (க-117)

## விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் 210 பேர் நியமனம்

கொழும்பு,மார்ச்29

விவசாய டிப்ளோமா பட்டம் பெற்ற 210 பேரை விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக விவசாயத் திணைக்களம் நியமனம் செய்துள்ளது.

விவசாயத்தை விருத்தி செய்வதற்காக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 6 வருடகாலத்தில் 11ஆயிரம் பேருக்கு விவசாயத் திணைக்களமும், கமத்தொழில் சேவைகள் திணைக்களமும வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. (க-6)

## வீடியோக் காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் அடுத்ததாக "The God Father" எனும் திரைப்படம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன்பெறலாம் எனப் புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (க)

## VACANCIES

MSF, French NGO, Informs that a translator French/English or French/Tamil is needed.

Persons interested, please contact Mr.Christophe Lacoste at MSF office.

**ADDRESS:**
***No.49,AMBALAVANAR ROAD, ATHIYADI, JAFFNA.***
***Tel - 021-2274***

(85940)

# MATHS CENTRE

*M.M.V.Road - Nelliady*

## O/L DAY CLASS

***ஆரம்பம்:-* 30-03-2001 வெள்ளி** 6.30 a.m. (ப.நே)

- மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.
- அனுபவமிக்க வடமராட்சி, தென்மராட்சி ஆசிரியர் குழு.
- அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(85841)

# தேவை


TYPE SETTING அனுபவம் உடையவர்கள் தேவை. PAGE MAKER 6.5 அல்லது COREL DRAW 9 முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, முன் அனுபவம், எதிர்பார்க்கும் வேதனம் ஆகிய விவரங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 05-04-2001.**

விளம்பர இலக்கம் - 1246,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(C/15889)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## காசிப்பிள்ளை வைரமுத்து

மண்ணுலகில் 10-03-1921
விண்ணுலகில் 09-04-2000

**திதி: 29-03-2001 வியாழக்கிழமை**

அன்புத் தந்தையே! எங்கள் குடும்பத்தின்
ஒளி விளக்கே! அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் வாழ வைத்த அப்பா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டு என்ன ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களை எங்கள் நெஞ்சங்கள் என்றும் மறவாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
கைதடி தெற்கு,
கைதடி.

மனைவி,பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமகன்.

(85817)

# மரண அறிவித்தல்

## V.A. இராமையா

(நாதஸ்வர வித்துவான்)
(தொண்டமனாறு செல்வச்சந்நிதி, ஆவரங்கால் சிவன் தேவஸ்தானங்களின் ஆஸ்தான வித்துவான், இசைக்குயில், 'இசைஞானி' நாதஸ்வரப்புலவர்)

தொண்டமனாறு, ஆவரங்கால் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமான் அருணாசலம் இராமையா கடந்த (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருமலரின் அன்புக் கணவரும், தங்கவேல் (தவில்), லோகநாதன் (நாதஸ்வரம்), சக்திவேல் (சுவிஸ்), வில்வநாதன் (சுவிஸ்), தர்ஷன் (தவில், இடைக்காடு ம.வி.பழைய மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமுதநாயகி, மாலதி, சரசாங்கி (சுவிஸ்), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குருபரன், கீர்த்திகா, அனுஷன், வேணுகாந்தன், சாகித்தியன் (சுவிஸ்), பிரவீன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், சத்தியபாமா, இராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (ஹொலன்ட்), வைத்தீஸ்வரன் (மலேசியாக் கண்ணன்), விக்னேஸ்வரன் (கொழும்பு விக்கி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவதாரணி, பவசர்மிலி ஆகியோரின் பெரியதகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆவரங்காலிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10ஆம் கட்டையடி,*
*ஆவரங்கால்.*

*தகவல்:-*
இ.திருமலர் (மனைவி),
பிள்ளைகள்.

(85952)

# புத்தாண்டு காலத்தில் படையினருக்கு இனிப்பு வழங்க 'சிஹல உறுமய' திட்டம்

## வடக்கு - கிழக்கு முகாம்களுக்கும் விஜயம்

கொழும்பு,மார்ச்29

தமிழ் - சிங்கள புத்தாண்டை ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டாம் என்று 'சிஹல உறுமய' கட்சி கோரியுள்ளது. அக்காலப் பகுதியில் வடக்கு - கிழக்கில் உள்ள படை முகாம்களுக்குச் சென்று படையினருக்கு இனிப்புப் பொட்டலங்களை வழங்கவும் அக்கட்சி தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக கட்சிப் பேச்சாளர் தெரிவித்திருப்பதாவது:-

நாடு தற்போது இருக்கும் சூழ்நிலையில் புதுவருடத்தை ஆடம்பரமாகக் கொண்டாடக் கூடாது. அந்தக் காலப்பகுதியில் வடக்கு - கிழக்குப் படைமுகாம்களுக்கு விஜயம் செய்வதுடன் முக்கிய நகரங்களிலுள்ள பெரிய சோதனை நிலையங்களுக்கும் விஜயம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

போர்முனையிலுள்ள படையினரை சிங்கள மக்கள் மறக்கவில்லை. அவர்களுடனேயே அவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படும். கட்சியின் முக்கியஸ்தர்கள், இவ்வாறு செல்லும் குழுக்களுக்குத் தலைமை வகிப்பர். இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் இணைவர் என நம்புகிறோம் - என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது படையினருக்கு இனிப்புப் பொட்டலங்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக நாடு முழுவதும் இனிப்புப் பொட்டலங்கள் சேகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# யாழ்.இந்து பழைய மாணவரின் 'கலையரசி' நிகழ்வு லண்டனில்

லண்டன்,மார்ச்29

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின பிரிட்டன் பழைய மாணவர் சங்கம் வழங்கும் 'கலையரசி - 2001' நிகழ்ச்சி எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு லண்டன் வொல்தம்ஸ்டோவில் உள்ள வொல்தம் பொரெஸ்ட் அசெம்பிளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இசை நிகழ்ச்சிகள், ஸ்ரீ மீனாட்சி பரதநாட்டியப்பள்ளி மாணவிகளின் நடனம், 'ரெயின்போ' குழுவினரின் இன்னிசை உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அன்றையதினம் நடைபெறும்.

உலகின் பல பாகங்களிலும் பணிபுரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஜி.சீ.ஈ. பரீட்சையில் சாதனை

கொழும்பு,மார்ச்29

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் 2,880 பரீட்சார்த்திகள் 8 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் அதிவிசேட சித்தியைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் அதிக எண்ணிக்கையானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல பாடசாலைகளிலிருந்து தோற்றிய பரீட்சார்த்திகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு விசாகா மகளிர் கல்லூரியில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய 386 பரீட்சார்த்திகளில் 384 பேர் ஜி.சீ.ஈ. உயர்தரம் பயில தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 246 பேர் 8 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

கொழும்பு தேவி பாலிகா (மகளிர்) வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 238 பேரில் 178 பேர் 8க்கும் மேற்பட்ட பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். கொழும்பு றோயல் கல்லூரியில் 155 பேரும் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா மகா வித்தியாலயத்தில் 75 பேரும் 10 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். (ம)

# புலிகளின் மக்கள் முன்னணியை அரசு இன்னும் தடைசெய்யவில்லை!

## அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு,மார்ச்29

**இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்துள்ள போதிலும் அதன் அரசியல் பிரிவாகச் செயற்பட்டு வந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை இன்னமும் தடை செய்யவில்லை. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப்புலிகள் இயக்கத்தை அரசாங்கம் தடைசெய்தமையை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட அறிவிப்பு வெளியான வர்த்தமானி அறிவித்தலையும் அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார்.

'சிஹல உறுமய'வின் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன சபையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த வேளையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திலக் கருணாரத்ன -

பிரிட்டன் இங்குள்ள அதன் தூதரகத்தின் மூலம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளதா என்பதை அறியும் முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

மகேந்திரராஜாவைத் தலைவராகவும், யோகரட்ணம் யோகியைச் செயலாளராகவும் கொண்ட இந்த அமைப்பு இலங்கையில் தடைசெய்யப்படாத பட்சத்தில் அதனைப் பிரிட்டனில் இயங்க அந்த நாடு அனுமதிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் திலக் கருணாரத்ன தெரிவித்தார். இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பும், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியும் தடைசெய்யப்பட்டுள்ளனவா என்ற கேள்வியையும் எழுப்பிய திலக் கருணாரத்ன, அதற்கான ஆதாரமாக வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பிக்குமாறும் கோரினார். (ஐ)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இரு மாதங்களில் 25 பேர் பலி!

வவுனியா,மார்ச்29

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் கடந்த இரண்டு மாதங்களில் 25 பேர் உயிரிழந்துள்ளதாக என ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

போஷாக்கின்மை, மலேரியா நோய்த் தாக்கம் ஆகியனவற்றினாலேயே பெரும்பாலானவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெப்ரவரி மாதத்தில் 14 ஆயிரத்து 659 பேர் அங்கு சிகிச்சை பெற்றனர் என்றும் -

அவர்களில் ஆயிரத்து 591 பேர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

24 பேர் நாய்க்கடிக்கு இலக்கானவர்கள்.

25 பேர் போஷாக்கின்மை காரணமாகச் சிகிச்சை பெற்றனர். அவர்களில் 8 பேர் சிறுவர்கள் ஆவர்.

20 பேர் இரத்தச்சோகை காரணமாகச் சிகிச்சை பெற்றுள்ளனர். (3)

## நெல் மிதமிஞ்சி கையிருப்பில்

# சிறு தானியங்களைப் பயிரிடுமாறு வன்னி விவசாயிகளுக்கு ஆலோசனை

வவுனியா,மார்ச்29

வன்னியில் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நெல் பெருமளவில் தேங்கியுள்ளதால் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் நாட்டம் செலுத்த வேண்டும் என்று விவசாயிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

இம்முறை கூடுதலாக நெல் விளைந்த காரணத்தால் 28 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளது என்றும் -

பொதுமக்களின் தேவைகளுக்கு 18 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் போதுமானது என்றும் -

மீதியாக 10 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் நெல் தேங்கிக் கிடப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக நெல்லுக்குப் பதிலாக சிறுதானியப் பயிர்களான பயறு, கௌப்பி, உழுந்து ஆகியவற்றைச் செய்கை செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

மக்களின் போஷாக்கு நிலையைச் சீராக்க சிறுதானியங்கள் அவசரமாகத் தேவையாக இருப்பதாலும் -

செய்கை நிலங்களை சீராகப் பேணவேண்டி இருப்பதாலும் -

சிறுதானியச் செய்கையில் ஈடுபடுமாறு விவசாயிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை விவசாயிகள் மத்தியில் நடத்தி வருகின்றது. (ஐ-3)

# சமாதானம் துளிர்விட எம்மை அர்ப்பணிப்போம்

எமது அன்றாட வாழ்வின் சவால்களை, நெருக்கடிகளை எதிர்கொண்டு வெற்றி பெற இறை நம்பிக்கையும், விடாமுயற்சியும் கொண்டு செயற்பட்டால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. அடுத்தவரில் தங்கி வாழும் எவரும் எடுத்த செயலை நிறைவேற்றுவது கடினம். யானையின் பலம் தும்பிக்கையிலே தங்கியுள்ளது போல் மனிதனின் பலம் நம்பிக்கையிலே கால்கோளாக வேண்டும்.

எமது நாட்டினதும், சமுதாயத்தினதும் பிரச்சினைகளுக்கு நம்பிக்கையற்ற தன்மையே அடிப்படைக் காரணியாக அமைகிறது. புரிந்துணர்வும், ஏற்புடைமையும், தியாகசிந்தையும் இதயத்தில் இருந்தால் நம்பிக்கை தானாக மிளிரும். இதனையே யேசுவின் வாழ்வுப்பாடம் எமக்கு உணர்த்தி நிற்கிறது. இறை நம்பிக்கை இருந்தால் இமயத்தையும் இடம்பெயர வைக்கலாம்.

**30 ஆம் நாள்**

இறை தந்தை மீது யேசு வைத்திருந்த அசையாத நம்பிக்கை மூலமே அருங்குறிகள், அற்புதங்கள் வழியாக மக்களை வழிப்படுத்தி விசுவாச மூட்ட முடிந்தது. இறை பலத்தைவிட்டு மனித பலத்தை நம்பி நாம், அமைதியை, விடிவை நாடி மாயைகளில் மயங்கி நிற்கவில்லையா? "கடவுள் ஒருவரே; அவர் தரும் கொடையை நாடாது ஒருவர் மற்றவரிடம் இருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே" (யோவா 5:44) என்று யேசு எமக்கு அறிவுரை கூறுகிறார்.

எனவே நாம் வணங்காக் கழுத்துள்ளவர்களாக வாழாது இறைபணியும், நம்பிக்கையும் கொண்டு பணியாற்றி இறைவனுக்கும், உண்மைக்கும் சான்று பகர்ந்து வாழ்வோம். நாம் இறைவனை நம்பினால் அடுத்தவர் எம்மை நம்புவார். அதன்வழி சமாதானம் துளிர்விட எம்மை அர்ப்பணிப்போம்.

எஸ்.ஜேசுதாஸ்

## ஜனாதிபதி காயமடைந்த குண்டுவெடிப்புச் சம்பவம்:

# ஒரே குடும்பத்தவர் நால்வரையும் விடுவிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நகரசபை மைதானத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்குபற்றிய கூட்டத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரையும் விடுதலை செய்யுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்கொலைக் குண்டுதாரியென சந்தேகிக்கப்படும் பெண்ணின் தாயார் எனத் தெரிவித்து மட்டக்களப்பு தாழங்குடாவைச் சேர்ந்த 70 வயதான கந்தப்பன் மாரிமுத்து, அவரது மகளான 24 வயதுடைய மாணிக்கம் கங்கேஸ்வரி, மகன்மாரான மாணிக்கம் நல்லையா, மாணிக்கம் கிருஷ்ண பிள்ளை, ஆகியோர் 29.12.1999இல் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மாணிக்கம் கங்கேஸ்வரி தாக்கல் செய்த அடிப்படை உரிமைமீறல் மனு மீதான விசாரணைகளை மேற்கொண்ட பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்களான ஷிராணி பண்டார நாயக்கா, எஸ்.எச்யாப்பா ஆகியோரே பிரஸ்தாப நபர்களை விடுதலை செய்தனர்.

தனது மூன்று மாதக் குழந்தையுடன சிறையில் வாடிய மாணிக்கம் கங்கேஸ்வரி தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

என்னையும் எனது தாயையும் இரு சகோதரர்களையும் கைதுசெய்து குற்றப்புலனாய்வுப் பொலிஸார் எல்லோரையும் கொழும்புக்குக் கூட்டிவந்தனர்.

எங்களை வைத்தியசாலையின் பிரேத அறைக்குள் அழைத்துச் சென்று ஒரு தலையைக்காட்டி எனது சகோதரியின் தலை என அடையாளம் காட்டும்படி பயமுறுத்தப்பட்டோம்.

பயத்தின் நிமித்தம் அந்தத் தலை எனது சகோதரியின் தலை என ஒப்புக்கொண்டோம். பின்னர் சகலரிடமும் இருந்து இரத்தம் எடுக்கப்பட்டு மரபணுப் பரிசோதனைக்கு இரத்தம் அனுப்பப்படவிருப்பதாக கூறப்பட்டது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செய்யப்பட்ட சோதனைகள் இறந்த குண்டுதாரிக்கும் எமக்கும் இடையில் எதுவித தொடர்பும் இருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

எனது தாயாரிடம் பலமுறை வாக்கு மூலத்தைப் பெற குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முயற்சி மேற்கொண்டனர். அவர் கிரகித்துக்கொள்ளக் கூடிய ஆற்றலை இழந்திருந்ததால் அவரிடம் வாக்குமூலம் பெறமுடியவில்லை.

விசாரணை எதுவும் இன்றி 12 மாதங்கள் தடுத்து வைத்திருப்பது மனித உரிமையை மீறும் செயலாகும் - என்று அவர் தெரிவித்திருந்தார்.

இவ் வழக்கு உயர் நீதிமன்றத்தில் கடந்த 26 ஆம் திகதி பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்க, எச்.எஸ்.யாப்பா ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் தோன்றிய அரச சட்டவாதி ரோகந்த அபய சூரிய பேட்டி மனுதாரரையும் அவரின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய சிபார்சு செய்வதாகக் கூறினார்.

இவ்வழக்கில் மனுதாரரின் சந்தியக் கடதாசியை சட்டத்தரணி செல்வி நிஸ்னா ஹமீத் அத்தாட்சிப்படுத்த, வழக்கினை சட்டத்தரணி இயூஜின் மரியாம்பிள்ளை தாக்கல் செய்திருந்தார். மனுதாரர் சார்பில் சட்டத்தரணி டி.எல். குணசேகரனின் அனுசரணையோடு சட்டத்தரணி அருட் திரு. வீரேசன் யோகேஸ்வரன் ஆஜராகி இருந்தார். (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இல.15, 3ஆவது லேன், அரசடி வீதி, நல்லூரைச் சேர்ந்த அநதோனப்பிள்ளை பாலசிங்கம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 443250332V), விசேட அ.அட்டை (இல.0902044462) என்பன 25.03.2001 அன்று கந்தர்மடம் சந்திக்கும் அரசடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (85960)

கா.கிருஷாந்தி என்பவருடைய தேசிய அ.அ.(இல.765032504V), விசேட அ.அ.(இல.0905002210), உயர் தொழில்நுட்ப அ.அட்டை என்பன 27.03.2001 அன்று தாவடிப் பிள்ளையார் கோயில் முன் வாயிலுக்கும் உயர்தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் த.காசிநாதன், சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியிலோ அல்லது உயர் தொழில்நுட்ப நிறுவனம், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியிலோ தயவு செய்து ஒப்படைத்து உதவவும். (85987)

## சிறுகதை

க.பொ.த. மாணவர்களே! சிறுகதை படிக்கிறீர்களா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'இலக்கியக் கட்டுரைகள்' நூலை வாசியுங்கள். சிறுகதை பற்றிய கட்டுரையுடன் 12 சிறுகதைகளுக்கு விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. 'யாழ்ப்பாணம்' சிறுகதைத் தொகுதியையும் வாசியுங்கள். (85888)

## காணவில்லை

தும்பளை தெற்கில் உள்ள சிவபாதம் முரளீதரன் என்பவரது வீட்டிலிருந்த பனசொனிக் டெக் (இல. NV SD 225 BODY NO: JP BZO 2 BO 1118) கடந்த 11.03.2001 இரவு காணாமற்போய்விட்டது. இதனைப் பற்றித் தகவல் அறிந்தவர்கள் மேற்குறித்த முகவரியில் தொடர்பு கொள்ளவும். (85951)

## வீடு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் இருவர் கொண்ட இளம் குடும்பத்துக்கு நல்லூர், திருநெல்வேலிச் சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள.இல.1249, மே/பா உதயன். (85990)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர், கல்பேட்ஸ் தேவை. தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தியடி, நல்லூர். (85943)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரந்தோறும் நடத்திவரும் வெள்ளி நிகழ்வில் -

இவ்வார நிகழ்வாக 'ஞானச்சுடர்' பங்குனி மாத இதழ் வெளியீடு இடம் பெறும்.

வெளியீட்டுரையை சிவஸ்ரீ கைநம சிவாயக்குருக்களும், மதிப்புரையை இரா.செல்வவடிவேலும் நிகழ்த்துவர்.(க)

# வடமராட்சி வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,மார்ச்29

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் இவ்வருடம் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள பத்து லட்சம் ரூபாவினை பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பாலாவி பற்சந்தை வீதி, வியாபாரி மூலை நாவலர் ஒழுங்கை, துன்னாலை, தம்பலத்தனை வீதி ஆகியவற்றின் திருத்த வேலைக்கும் பனிக்கர் குளம் ஆழமாக்கல், கொற்றாவத்தையில் குழாய்க் கிணறு அமைத்தல், உபய கதிர்காமம் பகுதியில் மதகு அமைத்தல் ஆகியவற்றுக்கு ஐந்து லட்சம் ரூபாவும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மணற்காடு கடற்கரை வீதி அமைத்தல், குடத்தனை பாடசாலையில் புதிய கட்டடம் அமைத்தல், குடத்தனை, பொற்பதி ஆகிய இடங்களில் மூன்று பொதுக் கிணறுகள் அமைத்தல், மணற்காடுப் பகுதியில் மீனவர் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் ஆகியவற்றுக்கு ஐந்து லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-117)

## கரவெட்டியில் சமாதானம் வேண்டிப் பிரார்த்தனை

வடமராட்சி,மார்ச்29

நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி ஏற்பட வேண்டி கரவெட்டி அரசடி வீதி தாழங்குழி முருகன் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை முதல் திருமுருகாற்றுப்படை முற்றோதல் ஆரம்பமாகி ஒருவார காலத்துக்கு தொடர்ந்து நடைபெறும்.

சாவகச்சேரி வித்தகம் பரமசாமி சுவாமிகள் தலைமையிலான அடியார்கள் திருமுருகாற்றுப்படையை ஓதுவார்கள். (க-173)

## வெள்ளைப்பூரான் தீண்டிய 6 பேர் ஆஸ்பத்திரியில்

வடமராட்சி,மார்ச்29

ஒரே இரவில் வெள்ளைப்பூரான் தீண்டி ஆறுபேர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கள் இரவு இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த குணரத்தினம் குகதாஸ் (18 வயது), பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த க.ரவீந்திரன் (30 வயது), இமையாணனைச் சேர்ந்த அ.செல்வரத்தினம் (40 வயது), நெல்லியடியைச் சேர்ந்த மு.விமலதாஸ் (13 வயது), கரவெட்டி கிழவிதோட்டத்தைச் சேர்ந்த இ.தாட்சாயினி (18 வயது), கரவெட்டியைச் சேர்ந்த நா.மங்களேஸ்வரி (37 வயது) ஆகியோரே ஒரே இரவில் பூரான் கடிக்கு இலக்கானவர்கள் ஆவர். (க-173)

## துப்பாக்கிச் சூட்டில் மீனவர் படுகாயம்

தென்மராட்சி,மார்ச்29

அதிகாலை இருள் சூழ்ந்திருந்த வேளையில் மீன்பிடிக்கச் சென்றோர் மீது விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கற்கோவளம் கடலில் இடம்பெற்றது.

மருதங்கேணியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் தங்கியுள்ள இராசையா யோகலிங்கம் (வயது 42) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு கட்டுமரங்களும் மீன்பிடி உபகரணங்களும் பலத்த சேதங்களுக்கு இலக்காகின. சுமார் ஒருலட்சம் ரூபாவுக்கு மேல் சேதமேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மூவர் கடலுக்குள் குதித்து உயிர் தப்பினர் என்றும் காயமடைந்த மீனவர் தெரிவித்தனர். (க-117)


# நன்றி நவில்கின்றோம்

கடந்த 17-03-2001 சனிக்கிழமை காலமான

**திருமதி**

**அருணாசலம் அமிர்தாம்பிகை** (அருமை)

*(புலோப்பளை, பளை)*

அவர்களின் துயரச்செய்தி கேட்டு இல்லத்துக்கு வருகைதந்து எமது துயரத்தில் பங்குகொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் அவரது இறுதிக்காலத்தில் வைத்திய சேவை வழங்கிய வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் தொலைபேசி மூலம் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள் - குறிப்பாக துன்னாலை வடக்குவாழ் மக்கள் - மற்றும் பளைப்பகுதிவாழ் மக்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
புலோப்பளை வீதி,
பளை.

- குடும்பத்தினர்.

*தற்காலிக முகவரி:*
துன்னாலை வடக்கு,
துன்னாலை.

(85989)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 - 12 - 1916



இறப்பு 09 - 04 - 2000

## அமரர் கிட்டிணர் வல்லிபுரம்

(மாத்தளையப்பா)

**திதி : 29-03-2001**

எமது அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள்
என்றென்றும் மாறாது!
இன்னல்கள் பெரிதெனிலும்
இன்முகம் காட்டி நின்றீர்கள்!
இன்று எம்மை விட்டு - நீங்கள்
இறைவனிடம் சேர்ந்து விட்டீர்கள்!

*சாளம்பன்,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

உங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு மகள், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

(C/15952)



# G.T.Z - யாழ். புனரமைப்புத் திட்டம்

கூறுவிலை கோரல்

விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

**21-03-2001 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எமது வீடுகள் புனரமைப்புத் திட்டத்துக்கான கூறுவிலை கோரல் தொடர்பான விண்ணப்ப முடிவு திகதி 04-04-2001 (புதன்கிழமை) மதியம் 12 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.**

**G.T.Z** (85992) - பிரதம இணைப்பாளர்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நீர்வேலி தெற்கு, ஒல்லை வேம்படி
ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி தேவஸ்தான
பரிபாலன சபையின் பொருளாளர்



## திரு.சின்னத்துரை மணியம்

**S.L.P.S 2-1 Spl.Trd.**

**(உபஅதிபர் - வயாவிளான் - மத்திய ம.வி.)**

அவர்கள் இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-1 க்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் மேலும் சிறப்புற வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

நீர்வேலி.

ஆலயப் பூசகரும்,
ஆலயபரிபாலன சபையினரும்,
அடியார்களும். (85978)



# NEW SCIENCE COLLEGE

இணைந்த கணிதம்

**A/L 2003**
நேர்கோட்டியக்கம்
(V.T Graph)
ஆரம்பம்:– 31.03.2001
சனி 12.00

**A/L 2002**
ஒரு தள விசைகளின் சமநிலை வகையீடு
ஆரம்பம்:– 31.03.2001
சனி 8.00a.m

**A/L 2001**
சிக்கல் எண்கள்
ஆரம்பம்:– 01.04.2001
ஞாயிறு 10.00a.m

A. பத்மநாதன்

(85955)



# PUPS FOR SALE

**WORMED AND WEANED 2 MONTHS OLD ALSATION/ DOBERMAN/ RIDGE BACK CROSS PUPS FOR IMMEDIATE SALE.**

**'EASWARI VASA'**
***No: 4, INUVIL ROAD, MANIPAY.***

(85996)



# மூன்றாம் மாத நீங்கா நினைவில்...

தாயின் மடியில் 1945 . 04 . 25



இறைவன் அடியில் 2000 . 12 . 25

## பரமானந்தம் சறோஜினிதேவி

(மண்டைதீவு-6)

அன்புள்ளம் கொண்டு ஆதரித்து
அணைத்து எம்மை வளர்த்தவளே..
எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து
எம்மை வழிநடத்தியவளே...
அன்புத் தெய்வமே! புன்னகை பூத்த உன்
திருமுகத்தை இனி நாம் காண்ப தெங்கே?

உங்கள் ஆத்மா சாந்தியடைய மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகனை வேண்டுகிறோம்.

*142/2, செல்லர் வீதி,*
*நல்லூர்.*

பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

(85994)

## பூனையைக் கொன்ற தமிழருக்கு சிங்கப்பூரில் 2 வாரச் சிறை!

சிங்கப்பூர் சிற்றி, மார்ச் 29

பூனையை உதைத்துக் கொன்ற தமிழருக்கு சிங்கப்பூர் நீதிமன்றம் இரு வார கால சிறைத்தண்டனை விதித்துள்ளது இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

36 வயதான காதன் கோவிந்தராஜ் சிங்கப்பூரில் பணியாற்றும் தமிழர். இவரது குடும்பத்தினர் தமிழகத்தில் உள்ளனர்.

இவர் தொலைபேசியில் இந்தியாவில் உள்ள உறவினருடன் கதைத்துக் கொண்டிருந்த சமயம், பூனை ஒன்று இவரது சப்பாத்தை நக்கியது.

விரட்ட விரட்ட அந்தப் பூனை மீண்டும் மீண்டும் காலைச் சுற்றியதால் ஆத்திரமடைந்த கோவிந்தராஜ் பலமாக உதைந்ததில் பூனை இறந்தது.

இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் கோவிந்தராஜுவுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

தொலைபேசியில் தனது மகன் பாம்பு கடித்து இறந்த தகவலை உறவினர் கூறியதாகவும் — மகன் இறந்த சோகத்தில் இருந்தபோது காலை நக்கியதால் ஆத்திரத்தில் பூனையை உதைத்ததாகவும் கோவிந்தராஜ் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

## புகைத்தலால் இறக்கும் பெண்கள்

வாஷிங்ரன், மார்ச் 29

உலகில் புகைத்தலினால் இறப்பு விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அமெரிக்க ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

புகைப் பிடிக்கும் பெண்களில் நுரையீரல் புற்றுநோயால் வருடம் ஒன்றுக்கு சுமார் 68 ஆயிரம் பேர் இறப்பதாகவும்—

மார்புப் புற்று நோயால் இறக்கும் பெண்களை விட இது 27 ஆயிரம் இறப்புகள் அதிகம் என்றும் ஆய்வில் கூறப்படுகிறது.

புகைப் பிடிப்பதால் உண்டாகும் நோய்களால் இறக்கும் பெண்களின் தொகை 1 லட்சத்து 65 ஆயிரம் பேர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அழகுக்காக ஏற்றிய ஊசி மருந்து பெண்ணின் உயிரைப் பறித்தது

மியாமி, மார்ச் 29

அழகை அதிகரிக்க ஏற்றப்பட்ட ஊசி மருந்து அமெரிக்கப் பெண்ணொருத்தியின் உயிரைப்பறித்தது.

இந்தச் சோகச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது —

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் வேரா லோரன்ஸ் என்ற 52 வயதுப் பெண் தனது இடையின் பின் புறத்தை பெரிதாக்கி அழகுபடுத்த ஆசைப்பட்டார்.

இதற்காக 'பிளாஸ்டிக்' சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரை வேரா அணுகினார்.

சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட தினத்தன்று வேராவுக்கு பின்புறத்தில் ஊசி மருந்து ஏற்றப்பட்டதாகவும்—

அதனைத் தொடர்ந்து அவர் சுவாசத் திணறல் ஏற்பட்டு மரணமானதாகவும் — கூறப்படுகிறது

இந்தச் சம்பவத்தையடுத்து தலைமறைவாகியுள்ள பிளாஸ்டிச் சத்திரசிகிச்சை நிபுணரைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (ஒ—6)

## அமெரிக்கப் போர் விமானங்கள் ஸ்கொட்லாந்துப் பகுதியில் மாயம்!

லண்டன், மார்ச் 29

ஸ்கொட்லாந்தின் பனிப்பாறைகள் நிறைந்த பகுதியில் பறந்த இரு அமெரிக்கப் போர் விமானங்கள் மாயமாக மறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் நண்பகல் குறிப்பிட்ட பகுதியில் எவ் 15 ரக ஒற்றை இருக்கை விமானங்கள் காணாமற் போயுள்ளன.

பனி மழை காரணமாக விமானங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதியிருக்கலாம் என்றும்—

அதில் விமானிகள் இருவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது

விமானங்கள் காணாமற் போனதாகக் கூறப்படும் நேரத்தில், இந்தப் பகுதியில் கேட்ட வெடியோசை அச்சத்தை உறுதி செய்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானங்கள் காணாமற் போன பகுதியில் தொடரும் பனி மழையால் கடும் இருட்டு நிலவுகிறது. இதனால் மீட்புப் பணியாளர்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, தெற்கு ஜேர்மனியின் நூரம்பேர்க் நகரப் பகுதியில், பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கபோர் விமானம்விபத்துக்குள்ளானதில்இரு விமானிகள் உயிரிழந்தனர்.

## தமிழ்ப்படங்கள் தொடர்பான நீதிமன்ற ஆணை

தமிழகத் திரையரங்குகளில் ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்த் திரைப்படங்களை வெளியிடவேண்டும்.

இவ்வாறு சென்னை உயர் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்த தமிழக அரசின் ஆணைக்கு எதிராக திரையரங்கு உரிமையாளர்கள் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பிலேயே நீதிமன்றம் இதனைத் தெரிவித்தது.

## காஷ்மீரில் மோதல்

காஷ்மீரின் வாஷிபாத் என்ற இடத்தில் மத்திய சிறப்புக் காவல் படையின் முகாமில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 தீவிரவாதிகளும், 2 காவற் படையினரும் உயிரிழந்தனர்.

காவல் படையினரின் சீருடையணிந்த தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் இருவர் முகாமுக்குள் நுழைந்து சுடத் தொடங்கினர். இதில் இருபடையினர் இறந்தனர். பின்னர் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டில் நடிகர் மன்சூர் அலிகானுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை

சென்னை, மார்ச் 29

தமிழ்த் திரைப்பட வில்லன் நடிகர் மன்சூர்அலிகானுக்கு 7 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தன்னிடம் உதவியாளராகப் பணிபுரிந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு தனது படத்தயாரிப்பு அலுவலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றிய பெண்ணை மன்சூர் அலிகான் பலவந்தப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்தப் பெண்ணுக்கு பெண் குழந்தை ஒன்றும் பிறந்தது.

இந்தப் பெண் கொடுத்த முறைப்பாட்டையடுத்து வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணையின்போது நடத்தப்பட்ட மரபணுப்பரிசோதனையின் மூலம் அந்தப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தைக்கு மன்சூர்அலிகானே தந்தை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை படுத்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும், குழந்தைக்கும் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படி மன்சூர்அலிகானுக்கு நீதிபதி உத்தரவிட்டார். அத்துடன் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதித்தார். (ஒ)

## அமெரிக்கப் பாடசாலையொன்றில் 18 வயது மாணவன் சுட்டதில் ஐந்து பேர் காயமடைந்தனர்!

வாஷிங்ரன், மார்ச் 29

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஒரு மாணவன் கண் மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டதில் 5 பேர் காயமடைந்தனர்.

சன்டியாகோவில் உள்ள உயர்தரப் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஜேஸன்ஹொப் என்ற 18 வயது மாணவன் இருகைகளிலும் இரு துப்பாக்கிகளை ஏந்திக் கண்டபடி சுட்டதாகவும்—

பொலீஸார் அந்த மாணவனைச் சுட்டுக் காயமேற்படுத்திக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த பாடசாலையில் இருந்து 6 மைல்கள் தொலைவில் உள்ள மற்றொரு உயர்தரப் பாடசாலையில் மூன்று வாரங்களுக்கு முன்னர் ஒரு மாணவன் இருவரைச் சுட்டுக் கொன்றதுடன், 13 பேரைக் காயப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது; (ஒ)

## இந்தியத் தேசிய திரைப்பட விருதுகள்: இளையராஜாவின் மகள் சிறந்த பின்னணிப் பாடகி

### இயக்குநர் பாரதிராஜாவுக்கும் பரிசு

புதுடில்லி, மார்ச் 29

இசையமைப்பாளர் இளையராஜாவின் மகள் பவதாரிணியும், இயக்குநர் பாரதிராஜாவும் இந்தியத் தேசிய திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டுக்கான 48 ஆவது தேசிய திரைப்பட விருதுகள், நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. தமிழில் சிறந்த திரைப்படமாகப் 'பாரதி' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் இடம் பெற்றுள்ள ''மயில் போல பொண்ணு ஒண்ணு'' என்ற பாடலைப் பாடிய பவதாரிணி சிறந்த பின்னணிப் பாடகியாகவும்,

'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் பாடிய சங்கர் மகாதேவன் சிறந்த பின்னணிப் பாடகராகவும்,

தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

'கடல் பூக்கள்' படத்தின் சிறந்த திரைக் கதைக்காக இயக்குநர் பாரதிராஜாவுக்கு விருது கிடைத்துள்ளது.

சிறந்த பொழுது போக்குத் திரைப்படமாக விக்கிரமனின் 'வானத்தைப்போல' விருது பெற்றது.

சமூகப் பிரச்சினையை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'வெற்றிக் கொடி கட்டு' சிறப்பு விருது பெற்றது.

'நிலாக்காலம்' திரைப் படத்தில் நடித்த உதயராஜ் சிறந்த குழந்தை நட்சத்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிறந்த நடிகராக அனில் கபூரும், சிறந்த நடிகையாக ரவீனா டாண்டனும் தெரிவு செய்யப்பட்டனர்.

'சாந்தம்' என்ற மலையாளத் திரைப்படத்துக்குச் சிறந்த படத்துக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது

'பாரதி' திரைப்படத்தில் பணிபுரிந்த தமிழகத்தைச் சேர்ந்த பி. கிருஷ்ண மூர்த்திக்குக் கலை இயக்குநர், உடை அலங்கார நிபுணர் ஆகிய இரு தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. (ஒ-6)

## ஹொங்கொங் கடவுச் சீட்டுகள் கறுப்புச் சந்தையில் விற்பனை

பெய்ஜிங், மார்ச் 29

சீனாவில், ஹொங்கொங் மாநில கடவுச் சீட்டுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதனால் போலிக் கடவுச் சீட்டுகள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

15 நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியம் ஹொங்கொங் வாசிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் நுழைவதற்கு 'விசா' பெறவேண்டியதில்லையென அறிவித்ததை அடுத்து ஹொங்கொங் மாநிலகடவுச் சீட்டுகள் அதிக விலைக்கு கறுப்புச் சந்தையில் விற்கப்படுவதாகவும்—

அரசியல் தஞ்சம் கோரி ஆசிய நாடுகளில் இருந்து ஐரோப்பாவுக்குள் சட்ட விரோதமாக, நுழைய விரும்புபவர்களே அதிக விலை கொடுத்து போலி ஹொங்கொங் கடவுச் சீட்டுக்களை வாங்கி வருவதாகவும்— கூறப்படுகின்றன

பிரிட்டிஷ் காலனித்துவ நாடாகஇருந்த ஹொங்கொங் சமீபத்தில் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த போது ஹொங் கொங்கில் மங்கோலிய இனத்தினர் மட்டுமன்றி, தெற்காசியாவைச் சேர்ந்தவர்களும் குடியேறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## ஈராக் மீதான தடைகளை அகற்ற அரபு நாடுகள் கோரிக்கை

அமான், மார்ச் 29

ஈராக்குக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அகற்றுமாறு அரபு நாடுகள் கோரியுள்ளன

ஜோர்டானில் நடைபெறும் அரபு நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டிலேயே இந்தக் கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பலஸ்தீனர்களுக்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் மாநாட்டில் வேண்டுகோள் விடப்பட்டது.

வளைகுடாப் போரினால் அப்பகுதியில் நெருக்கடி ஏற்பட்ட பின்னர் இடம்பெறும் முதலாவது அரபு உச்சி மாநாடு இதுவாகும்.

இஸ்ரேலுக்கு எதிராக வளர்ந்து வரும் பலஸ்தீனர்களுக்கு அரசியல் மற்றும் நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாநாட்டில் பிரதானமாகவலியுறுத்தப்படும் எனக் கருதப்படுகிறது.

மன்னர்கள், அமீன்கள், அதிபர்கள் உட்படப் பல அரபு நாட்டுத் தலைவர்கள் இந்த இருநாள் மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர். (ஒ)

கைதிகள் அதிர்ச்சித் தகவல்:-

# தாம் தயாராக வைத்திருந்த ஆயுதங்களால் சிறையினுள்ளே படையினர் எம்மை தாக்கினர்

## காவலர்கள் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 29
''சிறைச்சாலைக்கு வெளியே இராணுவத்தினர் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருக்க உள்ளே தடுத்து வைக்கப்பட்டிருந்த படையினர் தாம் ஏற்கனவே தயாராக வைத்திருந்த ஆயுதங்களால் எம்மைத் தாக்கினர்.''

—இவ்வாறு யாழ். சிறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தெரிவித்தனர்.

தமிழ்க் கைதிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டதாவது:-

அங்கு கைதிகளாக இருக்கும் இராணுவத்தினர் ஏற்கனவே தயார் நிலையில் வைத்திருந்த கம்பிகள் மற்றும் சோடாப் போத்தல்கள், சிறைக் காவலரிடமிருந்து பெற்ற பொல்லுகள் என்பவற்றால் எங்களைத் தாக்கினர்.

அவர்கள் எம்மைத் தாக்கிக் கொண்டிருக்கும் போது சிறைக்காவலர்கள் எம்மைக் காப்பாற்றாது சிரித்துக் கொண்டிருந்தனர். இச் சம்பவத்தில் எம்மில் சிலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்துவந்தசிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகள் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளை சந்தித்து உரையாடிய போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

சிறையிலுள்ள கைதிகளுக்குத் தரமான உணவு வழங்கப்படுவதில்லை. குளிப்பதற்குக் கூட போதிய வசதிகள் இல்லை. இங்குள்ள ஒவ்வொரு அறையிலும் அளவுக்கு அதிகமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் சிறைச்சாலை அதிகாரிகளால் செய்து தரப்படவில்லை. 10 நிமிடங்கள் கூட சிறை அறைகளுக்கு வெளியே நடமாட விடுவதில்லை.

கைதிகள் என்ற காரணத்துக்காக மனிதாபிமானமற்ற முறையில் எம்மை நடத்துகின்றார்கள்.

— இப்படி அவர்கள் தெரிவித்ததாக அறியவந்தது.

கைதிகளின் குறைபாடுகளைக் கேட்டறிந்துகொண்ட சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகள் அங்கு கைதிகளுக்கு வழங்கப்படும் உணவினைப் பார்வையிட்டதுடன் சிறைச்சாலை சுற்றாடலையும் அவதானித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 இராணுவக் கைதிகளும் பலாலிக்கு மாற்றம் செய்யப்பட்டது தெரிந்ததே. (ம-5)

# வன்னி செல்ல இருந்த 11 ஆசிரியர் தீவகத்துக்கு தற்காலிக நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
ஆசிரியர் பயிற்சியை முடித்தவர்களில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்திவு மாவட்டப் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் 11 பேர் தற்காலிகமாக தீவக பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வன்னிப் பிரதேசத்திற்குச் செல்ல பிரயாண வசதி பெறுவதில் உள்ள சிரமங்களைச் சுட்டிக்காட்டி யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குத் தம்மை நியமிக்குமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும்—

இதனை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் ஆசிரியர் பற்றாக்குறையாக இருக்கும் தீவகக் கல்வி வலயத்திற்கு இவர்களைத் தற்காலிகமாக நியமித்துள்ளதாகவும்—

யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்டோர் தமக்குரிய நியமனக் கடிதங்களை யாழ். கல்வி வலய அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவக கல்வி வலயத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்களும் வன்னியில் அவர்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட பாடசாலைகளின் விவரமும் வருமாறு:-

* ரி. சுரேஸ்குமார் — கிளி/செம்பியன்குன்று அ. த. க. பாடசாலை.
* கே. விஸ்னுகாந்தன் — கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.
* ஏ. அகஸ்ரின் —கிளி/புன்னைநீராவி அ. த. க. பாடசாலை.
* திருமதி எஸ் பாலறாணி—வட்டக்கச்சி தெற்கு அ. த. க. பாடசாலை.
* திருமதி பு வைத்தீஸ்வரன்—கிளி/கிராஞ்சி அ. த. க. பாடசாலை.
* எஸ். முரளிமோகன் — ஒட்டுபுலாசி அ. த. க. பாடசாலை.
* வி. வை. லெனின் — நட்டான் கண்டல் அ. த. க. பாடசாலை.
* ஆர் அமுதா—பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.
* ஜி. ரி. ஜீவகலா—புத்துவெட்டுவான் அ. த க. பாடசாலை.
* கே. லோகலெட்சுமி — சின்னவலையன்கட்டு அ. த. க. பாடசாலை.
* எஸ் சுதர்சினி வட்டக்கச்சி அ. த. க. பாடசாலை.

(ஜ-6)

# மாநகரசபை வெளிக்கள ஊழியர் 36 பேர் பதவியில் இருந்து நீக்கம்

## யாழ். மேயர் ரவிராஜ் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 29
யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வெளிக்களப் பணியாளர்கள் 36 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் மேயர் ந. ரவிராஜ் அறிவித்துள்ளார்.

மாநகரசபையின் சுமுகமான செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவித்து சிகிச்சை நிலையங்களை மூடி, வேலை நிறுத்தத்தில் குதித்து கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் இடைஞ்சலை ஏற்படுத்திய காரணத்தினால் தனது அங்கீகாரத்துடன் 15-03-2001 முதல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் யாழ். மாநகர சபையுடன் எந்தவிதத் தொடர்பும் இல்லை. பதவி நீக்கப்பட்ட வெளிக்கள ஊழியர்கள் மாநகர சபையால் வழங்கப்பட்ட சீருடைகளை அணிந்தவாறு, புதிய டாக்டரினால் நடத்தப்படும் கிளினிக்குகளுக்குச் செல்லும் கர்ப்பிணித் தாய்மாரையும் குழந்தைகளையும் தடுத்து வருகின்றனர் என்று எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவர்கள் தமது சீருடைகளை அணிந்து சபைக்கு மாறான செயல்களில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம். இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால் அவற்றுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான சுகாதார சேவை எந்தவித தடங்கலுமின்றி நடைபெறுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராகச் செயற்படுபவர்களின் செயல்களுக்கு துணை போக வேண்டாம் என்று சபையின் பணிகளில் அக்கறை உள்ள பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வண்ணார்பண்ணை கிரிப் பிள்ளையார் கோயில், மடத்தடி, கண்டி வீதி, நல்லூர் குறுக்கு வீதி, அரசடி வீதி ஆகிய இடங்களிலுள்ள சிகிச்சை நிலையங்கள் தொடர்ந்து அதே இடங்களில் வழமை போன்று இயங்கும்.

— இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ம)


உ

ஏழாலை மத்தி

## ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

ஏழாலை.

அம்பிகை அடியார்களே......!

ஏழாலை மத்தி வசந்தி கோயிலென வழங்கும் அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி உள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் நாளை (30-03-2001) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் வீதியுலா வருவதற்காகப் புறப்பட்டு மல்லாகம், சுன்னாகம், மாகியப்பிட்டி, சங்கானை, தொட்டிலடி, சிரணி நாகம்பாள் கோயில், மானிப்பாய், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், மயிலங்காடு வழியாக 31-03-2001 சனிக்கிழமை தனது இருப்பிடத்தை வந்தடைவாள் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிகழும் விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 3 ஆம் திங்களாகிய 2-4-2001 அன்று விஷேட குளிர்த்தி பூசைகளும் அன்னதானமும் நடைபெறும்.

### வருடாந்த உற்சவம்

அம்பிகையின் வருடாந்த உற்சவம் 06-04-2001 வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெற்று ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் திங்கட்கிழமை வைரவர்மடையும் பூங்காவனமும் மகேஸ்வர பூஜையும் நடைபெறும் என்பதை அம்மன் அடியார்களுக்கு அறியத்தருவதோடு இவ்விழாக்காலத்தில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்மனைத் தரிசித்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
வசந்தி அம்மன்.

ஏழாலை. (86000)


# நீதிபதிக்கு ரூ. 1 கோடி நஷ்டஈடு வழங்க லேக்ஹவுஸுக்கு பணிப்பு

கொழும்பு, மார்ச் 29
தனக்கு அவதூறு ஏற்படுத்தியதாகத் தெரிவித்து அரசசார்பு 'லேக்ஹவுஸ்' பத்திரிகைக்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிபதி ரவிந்திர தாப்ரூ தாக்கல் செய்திருந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நீதிபதிக்கு ஒருகோடி ரூபா லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

''பலவந்தமாக அத்துமீறி வீடொன்றுக்குள் நுழைந்த மாவட்ட நீதிபதிக்கு எதிராக வழக்கு'' என்ற தலைப்பில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிங்கள வெளியீடான 'தினமின' பத்திரிகை 1999 டிசம்பரில் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது

அந்தச் செய்தி தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதி தாக்கல் செய்த வழக்கிலேயே மேற்படி நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டுத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதியும், தற்போதைய மாத்தறை மாவட்ட மேலதிக நீதிபதியுமான ஏ.எம். மூஹம்மட் மாஹி இத்தீர்ப்பை வழங்கியுள்ளார்.

சட்டத்துறையில் உயர் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவருக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்பட வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது இதுவே முதற்றடவை என நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் நீதித்துறைப் பதவியில் ஒருவர் இருக்கும் போது ஒரு நிறுவனத்திற்கு எதிராக வழக்காடி அந்த நிறுவனத்துக்கு எதிராகத் தீர்ப்பொன்றினைப் பெற்றிருப்பதும் சட்டத்துறை வரலாற்றில் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை, வியாபாரிமூலை பழவத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ். பிறவுண் வீதி நரியன்குண்டு ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலய மகாகும்பாபிஷேக தினவிழா எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு அபிஷேகம் இடம்பெறும்; தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும்.

★ ★ ★

கோப்பாய் தெற்கு, மாந்தோட்டம் மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மாகோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஏப்ரல் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (உ—6)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோயில் சங்காபிசேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும், அங்கு மதியம் அன்னதானமும் வழங்கப்படும். (உ—6)

★ ★ ★

வண்ணை — வடமேற்கு ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் திருக்கோயில் கிராம ஊர்வலம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

ஏப்ரல் முதலாம் திகதி காலை 9 மணிக்கு நவோத்ர சகஸ்ர சங்காபிசேகமும் 11 மணிக்கு திருக்குளிர்த்தி வைபவமும் 12 மணிக்கு அன்னதானமும் 4 மணிக்கு அம்பிகை வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

★ ★ ★

புங்குடுதீவு மேற்கு, பெருங்காடு, கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தர சுவாமி திருக்கோயில் மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஏப்ரல் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 6 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (உ—9)

## SELECTION OF VOLUNTEERS

" Order of St.John 900 Years of Commemorative Medal"

2000 ஆம் ஆண்டு Order Of St.John 900 ஆம் ஆண்டு பூர்த்தி செய்ததையிட்டு St.John AMBULANCE சர்வதேச தலைமையகம் பிரிகேட்டினால் வெளியிடப்பட்ட அன்பளிப்பு விருது, நீண்ட கால மாகத் தொடர்ந்து சேவையாற்றும் வட மாகாணத்தில் உள்ள முதல் உதவித் தொண்டர்களில் இருந்து தெரிவு செய்து வழங்கு வதற்குத் தீர்மானித்துள்ளோம். பின்வரும் தரத்திலுள்ள தகுதி யுடையோர் தமது சேவையை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளைப் பதிவுத் தபால் மூலம் எமக்கு 2001.04.06 ஆம திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கி றோம்.

01) மாவட்ட ஆணையாளர் தரத்திற்கு மேற்பட்டவர்கள்.
02) உதவி மாவட்ட ஆணையாளர் தரத்திலிருந்து படை அத்தியட்சகர்கள் தரத்திற்கு உட்பட்டவர்கள்
03) படை உத்தியோகத்தர் தரத்திலிருந்து பிரிவு உத்தியோ கத்தர் தரத்திற்குட்பட்டவர்கள்
04) பாடசாலைப் பிரிவைச் சேர்ந்த அங்கத்தவர்கள்
05) பதிவு செய்யப்பட்ட தொண்டர் நிறுவனங்களில் நண்ட காலமாகச் சிறந்த தொண்டாற்றியவர்கள்.

**St.John Ambulance**
*Jaffna South*
*Station Road,*
*Kokuvil* (86007)

Selection Committee
Order Of St.John 900 Years
Of Commemorative Medal

அனுசரணை: செண்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவை.

## கண்ணீர் அஞ்சலி

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர்

### அமரர் செ.அமிர்தலிங்கம்

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள், ஊழியர்கள்,
(86011) சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.


## NEW SCIENCE COLLEGE JAFFNA

பௌதிகவியல் By:MR.KARUNANITHY B.Sc. (SPL)

**2003 A/L**

பொறியியல் புதன், வெள்ளி 4.00 மணி

ஆரம்பம்: 30.03.2001

குறிப்பு: மாணவர்களின் வசதிக்கேற்ப நேரசூசி மாற்றம் செய்யலாம

(86017)



## புதிய பிரிவு ஆரம்பம்

✲ C++ - 31.03.2001 சனிக்கிழமை 7.00a.m - 9.00 a.m.

✲ இப்பிரிவில்

SCH I (ADCS, DCS)
SCH II (APS) மாணவர்களும் இவ்விரிவுரையில் கலந்து கொள்ளவும்.

*Note:-*
SCH I இற்குரிய
SCH II இற்குரிய
Visual Basic பரீட்சை எதிர்வரும்
02.04.2001 திங்கட்கிழமை 9.00 - 12.00 மணிக்கு
எமது தலைமைக் காரியாலய
விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

**Director (Ad)**

**IBMS**
No.701, K.K.S. Road Jaffna.

(C/15954)


## பணத்தைச் சுருட்டியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக் காக நோயாளி ஒருவரைக் கூட்டி வந்தவரிடமிருந்து சுமார் 11 ஆயிரம் ரூபா பணத்தைச் சுருட்டியதாகக் கூறப் படும் ஆஸ்பத்திரிச் சிற்றூழியர் ஒரு வர் வகையாக மாட்டிக்கொண்டார்.

நேற்று வெளிநோயாளர் பிரிவில் இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பந்தப்பட்டவர் தவறவிட்ட பணச்சுரையைச் சுருட்டியதாகக் கூறப் படும் சிற்றூழியரின் மீது சந்தேகம் கொண்ட - அப்போது ஆஸ்பத்திரி யில் கடமையில் இருந்த - பாது காப்பு ஊழியர் ஒருவர், அவரை தீவிர விசாரணைக்கு உட்படுத்தினார். அப் போது குட்டு வெளிப்பட்டது. தவற விட்டப்பட்ட பணம் சம்பந்தப்பட்ட சிற் றூழியரின் பெட்டகத்திலிருந்து பாது காவலரால் மீட்கப்பட்டது. அது பின் னர் உரியவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

சந்தேக நபர், ஆஸ்பத்திரி நிர் வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் மீது இதுபோன்ற மேலும் பல குற் றச்சாட்டுகள் இருப்பதாக ஆஸ்பத் திரி வட்டாரங்கள் தெரிவித்தன.(உ)

## மாநகர சபைக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.மாநகர சபையின் மாதாந் தக் கூட்டம் மேயர் சட்டத்தரணி என். ரவிராஜ் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு யாழ்மாநகர சபை அலு வலகத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் நிதிக்குழு மற்றும் சுகாதாரக்குழுக் கூட்டங்கள் நேற்று நடைபெற்ற போதும் மராமத்துக் குழு கூட்டம் நடைபெறவில்லை.

மராமத்துக் குழுவின் தலைவரான பிரதிமேயர் செல்லன் கந்தையன் கூட்டத்துக்கு சமுகமளிக்காமையினால் இக கூட்டத்தை நடத்த முடியவில்லை என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)

## சனியன்று பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்29

இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் வகுப்பு 11 பிரிவு'அ' வில உள்ள அலுவலர்களுக்கான வினைத திறமை காண் தடைப்பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள் ளது.

பரீட்சைக்குத் தோற்றுவோருக் கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,மார்ச்29

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழ கம் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் ஒருவருட கால தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறியை ஆரம்பிக்க உள்ளது.

அடுத்த மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற் சிக்கு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட் சையில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண் ணப்பப் படிவத்தினையும் ஏனைய விவரங்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் வதிரியில் உள்ள பயிற்சி நிலையத்தில் பெற்றுக் கொள் ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப் புத் தொகை வழங்கப்படும் என்று சுருக்கெழுத்துக் கழகச் செயலாளர் தெரிவித்தார். (ம)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்29

நாளை மறுதினம் சனிக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த் தனா யாழ்பாணத்தில் நடத்தவிருந்த பத்திரிகையாளர் மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். **Speedup Classes**

## இணைய மொழி ஜாவா

➤ OOPS (Mon.,Wed. 7.30-8.30) Multithreading (Tue.,Fri. 7.30-8.30)
➤ HTML.APPLETS & 2D GRAPHICS (sat.,Sun. 7.00-8.30)
➤ புதிய பிரிவு ஆரம்பம 31.03.2001 (Sat.,Sun. 10.30-1.30)

**DBMS**
➤ Data base designing,Access,SQL, Oracle,Visual Basic (Mon.,Wed. 1.00)

(C/15959)



*வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப உலகில்!*
*உங்கள் வீட்டிற்கு கணனி தேவையா?*

ஒரு தடவை விஜயம் செய்யுங்கள்!

## IBMS IT Market

அதி நவீன கணனிகள்
**Pentium III 866 MHz (Multimedia)**
**Pentium II 633 MHz (Multimedia)**
**Printer, Scanner** மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் யாவற் றையும் விஷேட இலகு தவணைக் கட்டணத் திட்டத்தின் மூலம் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**IBMS IT Market**
No.701, K.K.S. Road, Jaffna.

(C/15955)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பல துறைகளிலும் உதைபந்தாட்டத்துக்காக
தங்களை அர்ப்பணித்து சேவை புரிபவர்களைக்
கௌரவிக்கும்
ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தின்
2001 ஆம் ஆண்டுக்கான
தேசிய விருதினைப் பெறும்
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின்
பல்துறை வித்தகன்

### திரு.தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்

அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/15961) பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்.

## பாராட்டும் வாழ்த்தும்



✲உதைபந்தாட்டத்தின் தன்னிகரில்லாத் தலைவன்
✲எமது கிராமத்தையும், கழகத்தையும் தேசிய ரீதியில் பிரபல்யமடையச் செய்த பேராசான்
✲ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தேசிய விருதினைப் பெறும் முதல் தமிழ்மகன்

### திரு.தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்

*அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

தமிழ் மன்றம், வதிரி (C/15960) டயமன்ட்ஸ் வி.க., வதிரி.

## மரண அறிவித்தல்

### கந்தையா சதாசிவம்

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம்(27-03-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், சிவசுஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், முத தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறி கந்தவேல் (ஜேர்மனி), தவவேல் (சுவிஸ்), கிருஷ்ணவேல் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப பனாரும், யமுனா (ஜேர்மனி), பிரபாயினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமிதா, தினேசன், அபிலாசன், கஜமுகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2001) வியாழக்கிழமை 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் மேற்கு குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.* (86017)

தகவல்:
மனைவி

# சுதேசியத் தயாரிப்பு 'ரொக்கட்' ஏவும் இந்திய முயற்சி தோல்வி

புதுடில்லி,மார்ச்29

இந்தியாவின் சுதேசியத் தயாரிப்பான ஜி.எஸ்.எல்.வி. 'ரொக்கட்'டை ஏவும் முயற்சி இறுதி நேரத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறுகள் காரணமாக கடைசிக் கணத்தில் கைவிடப்பட்டது.

ஸ்ரீஹரிக் கோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி நிலையத்திலிருந்து இந்த 'ரொக்கட்'டை ஏவும் நிகழ்ச்சியைப் பொதுமக்கள் நேரடியாகப் பார்ப்பதற்காக இந்தியத் தேசியத் தொலைக்காட்சியில் இந்த நிகழ்வு பற்றிய ஒளிபரப்பு நேற்று பிற்பகல் நேரில் அஞ்சல் செய்யப்பட்டது.

401 தொன் எடையும் 49 மீற்றர் உயரமும் கொண்ட இந்த ரொக்கட் 540 கிலோ எடையுடைய செயற்கைக் கோள் ஒன்றை விண்ணுக்கு எடுத்துச் செல்லவிருந்தது.

'ரொக்கட்'டை ஏவுவதற்கான பூர்வாங்கப் பணிகள் முடிவுற்றதும் நேற்று பிற்பகல் 3.37 மணிக்கு புறப்படக் கூடியதாக அதன் இயந்திரங்கள் இயக்கப்பட்டன.

இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்ததும் பக்கவாட்டில் தீப்பிளம்புகள் கிளம்பத் தொடங்கின. இதனையடுத்து 'ரொக்கட்'டை விண்ணுக்கு ஏவும் முயற்சி இடைநிறுத்தப்பட்டது.

பத்து வருட அயராத முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த 'ரொக்கட்' இறுதி நேரத்தில் செயலிழந்து போனமை இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு பேரிடி என்று விவரிக்கப்பட்டது.

(உ-6)

## அரச பயங்கரவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மிருசுவில் படுகொலைகள், பிந்துனுவெவ படுகொலைகள் என அரச பயங்கரவாதம் நாட்டில் தலைவிரித்தாடுகின்றது.

அரசாங்கம் சமாதான முயற்சிகளில் நேர்மையாக நடக்கவில்லை. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பை மட்டும் பிரிட்டன் தடை செய்திருப்பது நியாயமற்ற நடவடிக்கை ஆகும். இந்தத் தடையால் புலிகள் தற்போது முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகள் குழப்பமடையலாம்.

- என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் தூதர் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருப்பதற்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை.

இது தற்செயலாக நடைபெற்ற விடயமாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் எப்போதும் நடுநிலையையே கடைப்பிடித்து வருகின்றது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்கும், இனப்பிரச்சினை பேச்சுக்கள் மூலமே தீர்க்கப்பட முடியும் என்ற செய்தி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார்.

(ம-6)


SUBRA(14)
SITHANKERNEY
BIOLOGY
MR E. SURENDRANATHAN
Sat. & Sunday
3.30 p.m. 2003 A/L
4.30 p.m. 2001 A/L
5.30 p.m. 2002 A/L
விரைவில்
4.30 p.m. Paper Class
(85980)

SUBRA (14)
O/L DAY Class
ஆரம்பம்:- 05-04-2001
வியாழன் 7.00
(C/15914)

புதிய பிரிவு! A/L 2003
(கலை, வர்த்தகம்) ஆரம்பம்:- 31 - 03 - 2001
சனி காலை - 8.00 மணி
ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணக்கீடு -D.SAM | தமிழ் - மீரா |
| வ.கல்வி -பசில் | இந்துநாகரிகம்-ஜோதீஸ்வரன் |
| பொருளியல்-இராஜேஸ்வரன் | இந்து சமயம்-சுரேன் |
| பொது வினா-தவசேகர் | அளவையியல்-மோகன் |
| ஆங்கிலம்-ஜெயக்குமார் | கிறிஸ்தவம்-மல்லிகா |
| புவியியல்- இக்னேசியஸ் | நாடகம்-சந்திரன் |

DMI - யாழ்நகர்.
(85936)

UNIVAC College of Computer Information Technology
1201, K.K.S.Road,Jaffna
க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்று உயர்தர வகுப்புக்குச் செல்லவுள்ள மாணவர்களுக்கு எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சியை வழங்கவுள்ளது.
O/L பரீட்சையில் 3Dற்கு மேல் பெற்ற மாணவர்கள் பயிற்சிக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. (100% Free)
ஏனைய மாணவர்களுக்கு ஒவ்வொரு Dற்கும் 2000/= சலுகை அளிக்கப்படும். பயிற்சி நெறி 05.04.01 இல் ஆரம்பமாகும்
விண்ணப்ப முடிவு திகதி: 04.04.01
- Director.
(85900)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
A/L 2003 கலை, வர்த்தகம்
புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| ACC. | ECO. | B.St. |
| தவா | சண் | முரளி |
| H.C | TAMIL | LOG. |
| சிவமகாலிங்கம் | லிங்கம் | சயந்தன் |
| DRAMA | GEO. | |
| ஜெயரஞ்சினி | வேலா | |

ஆரம்பம் :- 31.03.2001 (சனி) காலை 6.30 மணி
(86016)


## பாதிப்புற்ற..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருசில ஆவணங்களில் கையெழுத்திடுமாறு அச்சுறுத்தி சித்திரவதை செய்ததால் அவற்றில் தாங்கள் கையெழுத்து வைத்ததாகவும்-

அவர்கள் சிறை அலுவலர்களிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து, சிறை அலுவலர்கள் அவர்களை நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அவர்களின் முறைப்பாட்டைக் கவனத்தில் எடுத்த நீதிவான், அவர்கள் இருவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை -

பாதிக்கப்பட்ட இரு பெண்களையும் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் நேரில் சென்று சந்தித்தனர். (ம)

## புதுவருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய யுத்தநிறுத்தமும், அது நீடிக்கப்படுவதுமே அர்த்தமுள்ள பேச்சுகளுக்கு வழிசெய்யும் என்பதை அரசின் உயர் வட்டாரங்கள் உணர்ந்துள்ளதாகவும் - மேற்படி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவ்வாறு யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதைக் கண்காணிக்க தனது கண்காணிப்பாளர்களை அனுப்பி உதவுவதற்கு தயாராக இருப்பதாக ஐரோப்பிய யூனியன் வட்டாரங்கள் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் அறிய வந்தது.

நேரடிப் பேச்சுகள் ஆரம்பிக்க முன்னர் அடையாளத்துக்கு - இரு தரப்பு நல்லெண்ணத்தைப் பரஸ்பரம் வெளிப்படுத்தி வளர்ப்பதற்கு - ஒரு சில நாள்களுக்காவது இரு தரப்பு யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என இவ்விடயத்தில் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## புலிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள இயக்கத்தை இலங்கை அரசு தடைசெய்துள்ள போதிலும் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள புலிகளின் மக்கள் முன்னணி இன்னும் தடை செய்யப்படவில்லை.

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்) (உ)


பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2002
பொருளியல்
S. வரதராஜன்
வரவு செலவுத் திட்டம்
சனி,ஞாயிறு 11.00-12.00
பொருளியல் II
பணமும் வங்கியும்
சனி,ஞாயிறு 8.00-9.00
ஆரம்பம்:
31-03-2001 சனி.
(85874)

O/L
DAY CLASS
ஏப்ரல் 02இல்
ஆரம்பம்
பெயர் பதிவுகள் ஏற்கப்படுகின்றன.
(C/15939)

SUBRA(14)
சித்தன்கேணி
INORGANIC CHEMISTRY
Sat. & Sun. 4-5 p.m.
CHEMISTRY
திரு. அன்பு
புவியியல்:- துரித மீட்டல்
வினாவிடை
BY: - ஐங்கரன்.
(85915)


## அமெரிக்காவில் புலிகளுக்கு ஆதரவு அதிகரிக்கிறது?

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட பின்பு அந்த நாட்டில் மக்களிடையே ஆதரவு அதிகரித்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை குறித்து அமெரிக்காவின் மனித உரிமை அமைப்புக்களும் ஏனைய நிறுவனங்களும் விவாதங்கள் நடத்தி வருவதாகவும் இதன் காரணமாகவே மக்களிடையே ஆதரவு பெருகி வருவதாகவும் கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கூறுகிறது.

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படும் நிலைமை உருவாகலாம் என்று அமெரிக்க அரசியல் ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருப்பதாக மேற்படி கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னணி ஆய்வு நிறுவனம் ஒன்று விடுதலைப் புலிகள் மீதான தடை பிழையான ஒரு இராஜதந்திரம் என்று தெரிவித்திருப்பதாகவும் அச்செய்தி மேலும் கூறுகிறது.

'இத்தகைய தடைகள் மிகக் குறைந்த அளவிலேயே விதிக்கப்பட வேண்டும். இத்தகைய தடைகளால் அமெரிக்கா தன்னைத்தானே அந்நியப்படுத்தக் கூடாது' என்று அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஜெனரல் ஹாலிம் பவல் அண்மையில் வெளியிட்டுள்ள கருத்தும் இந்தச் செய்தியில் மேற்கோள் காட்டப்பட்டது. (உ)

## வீட்டுக் கதவில் பொருத்தப்பட்டிருந்த பொறிவெடியில் சிக்கி இரு சிப்பாய்கள் பலி!

சாவகச்சேரிப் பிரதேசத்தில் வீட்டின் கதவொன்றில் பொருத்தப்பட்டிருந்த பொறிவெடி ஒன்று வெடித்ததில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்களன்று மாலை இடம்பெற்றிருந்தது.

கைவிடப்பட்டிருந்த வீடு ஒன்றை படையினர் சோதனையிட்ட சமயமே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றிருக்கிறது.

பழைய பொறி வெடி ஒன்றே வெடித்திருப்பதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

(உ-6)

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தையும் அரச உயர் மட்டத்துக்குக் கொண்டு செல்வதால் எந்த விதத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை.

எனவே தமிழ் மக்கள் மீதான இத்தகைய அராஜகப் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதுடன், இந்தப் பெண்களுக்கு நிகழ்ந்த அநியாயத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவோம்.

பாதிக்கப்பட்ட இரு பெண்களையும் நான் நேரில் பார்த்தேன். "எமக்கு ஏற்பட்டது போன்ற துன்பம் வேறு பெண்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகவே நாங்கள் இந்தச் சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்க முன் வந்தோம். அதற்காகவே எமது உயிரை இன்னும் கையில் பிடித்து வைத்துள்ளோம்" - என்று அவர்கள் என்னிடம் கூறிக் கதறினர் - என்று தெரிவித்தார்.

(ம-6)

## பிரான்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் அனைத்துக்கும் பிரான்ஸ் தனது ஆதரவை வழங்கும் என்று ஜக் ஷிராக் இலங்கை ஜனாதிபதிக்கு உறுதியளித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரான்ஸுக்கான இலங்கைத் தூதர் காசி செட்டி ஆகியோரும் உடன் இருந்தனர் (ம)


விக்னா
கல்வி நிறுவனம்
புவியியல் 2001 A/L
Sat.,Sun. 12-1
Paper 2002 A/L
Sat.,sun. 1-2
ஆசிரியர்:
S.ஐங்கரன்
(C/15913)

உடன் தேவை
சிலிண்டர் மெஷின் இயக்குநர், அச்சுக் கோப்பாளர், புத்தகம் கட்டுநர் உடன் தேவை. நேரில வரவும்.
பாரதி பதிப்பகம்
430, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (C/15963)

றோயல் அக்கடமி
சண்டிலிப்பாய்
A/L 2003 கலை, வர்த்தகம்
ஆரம்பம் :- 2001.03.31 சனி 9.00 மணி

| | | |
|---|---|---|
| ACC. | ECO. | COM. |
| திரு.நித்தி | திரு.ஜெயகுமார் | திரு.நந்தீஸ் |
| TAMIL | LOG. | H/C. |
| திரு.லிங்கம் | திரு.பவன் | திரு.ஸ்ரீஸ் |
| DRAMA | ENGLISH | |
| திரு.மதி | திரு.விஜயபாஸ்கர் | |

குறிப்பு: ஆரம்பத்திலிருந்து போதிக்கப்படும்.
O/L DAY CLASS ஆரம்பமாகிவிட்டது
- நிர்வாகி.
(C/15962)

பதவி வெற்றிடங்கள் - உடன் விண்ணப்பிக்கவும்
கீழ்க்காணும் பதவிகளுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. கார் சாரதி
2. ஓட்டோ சாரதி
3. பத்திரிகை விநியோகஸ்தர்
தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்களும் கொழும்பில் பணியாற்ற விரும்புவோரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை உடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.
கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.
விளம்பர இல: 1247
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/15899)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.